சிந்திக்கும்போதக மேபவம்போம்வினை தீரும்பிறப்
புந்திக்கும்போதக முத்திகைகூடும்புகல்வதென்னே. (௩௧)

புகன்றிருக்குந்தி கைப்பானரியக்குடிபோந்தவன்கோ
மகன்றிருக்குந்தி மகாருக்கவனடிவாழ்த்துமினோ
வகன்றிருக்குந்தி க்கும்வெம்பிணியாவுமகன்றழியு
மிகன்றிருக்குந்தி றனும்பகையுங்கெடுமிப்புவிக்கே. (௩௨)

புவிப்பாலகாத ண்ணளிமிக்குளாயிசைபொங்குநந்தன்
செவிப்பாலகாத ண்பொழிலரியக்குடித்தேவவென்றன்
கவிப்பாலகாத வன்பாய்ச்சேய்சொலுஞ்சொற்களென்றுகொண்டான்
தவிப்பாலகாத வினைக்கடல்மூழ்குதலைத்தவிர்த்தே. (௩௩)

தவத்திருக்கோட்டின ன்காரரியக்குடித்தாமமொடு
நவத்திருக்கோட்டின கர்மெய்யமேவியநாதவென்று

பவத்திருக்கோட்டின ர்போலுனைக்கூவிப்பவளத்தைக்க
துவத்திருக்கோட்டின ம்மாதுனைக்கூடத்துணிந்தனளே. (௩௪)

துணிவாகவந்தனை செய்துன்றனமங்கள்சொல்லவென்முன்
னணிவாகவந்தனை ச்செற்றுயரியைநகருடையாய்
திணிவாகவந்தனை வேங்கடநின்றருள்செய்யத்துழா
யணிவாகவந்தனை ப்போல்வேனுயிர்படுமத்தினத்தே. (௩௫)

அத்தப்பிறங்கலை யுற்றுன்கதிரவனம்புலிவிண்
டத்தப்பிறங்கலை ச்செய்தானெனவுட்டளர்ந்துவிட
மொத்தப்பிறங்கலை யாலரியக்குடியப்பவென்கொம்
பெத்தப்பிறங்கலை யார்ந்தாள்செயாயருளென்னிலையே. (௩௬)

என்னலமோதி வருவாயெனவெய்திலாதிங்கிருத்
தன்னலமோதி ருவன்னுய்மற்றோரிடஞ்சாற்றுதற்கோ
வுன்னலமோதி யினோர்ந்தினியேனுமுரைத்திடுவாய்
சென்னலமோதி வளரரியக்குடிச்சீதரற்கே. (௩௭)

சீதக்கண்டாமரை யாரரியக்குடித்தேவரைநால்
வேதக்கண்டாமரை வீதியின்வாய்ப்புள்ளின்மேன்மொழிக
ணீதக்கண்டாமரை யாளெழுந்தேதொழநெஞ்சத்துன்னிப்
போதக்கண்டாமரை ப்பாற்கண்டிலேந்தரிபூங்கலையே. (௩௮)

பூங்கலையாமினி யோங்கணிதாங்குதிபோதருமின்
றுங்கலையாமினி க்கண்ணரியக்குடியச்சுதன்சீர்
பாங்கலையாமினி தாமொழியாய்வரப்பார்த்துகந்தா
னீங்கலையாமினி த்தோமடையாதெம்மெழிலணங்கே. (௩௯)

எழுந்துவணக்கொடி போற்கரங்கூப்புவளிப்புவிமேல்
விழுந்துவணக்கொடி ருப்பாளவனின்றுமேவிலனென்
றழுந்துவணக்கொடி நுண்ணிடையாளழுவாளிமையோர்
கொழுந்துவணக்கொடி யானரியக்குடிகொண்டுய்மினே. (௪௦)

கொண்டவராகவகையா ர்ந்தரியக்குடிகருதார்
திண்டவராகவகையா ழியாய்வெய்யதீவினைகள்
விண்டவராகவகையா ர்பவச்செய்கைமேன்மையெல்லாங்
கண்டவராகவகையா ர்செருக்குமென்கண்ணைவரே. (சக)

கண்ணுதிருப்பதி யாம்வடவேங்கடக்கண்ணகொண்மூ
வண்ணுதிருப்பதி மார்பரியக்குடிமாயநின்ரு
ளெண்ணுதிருப்பதி னுங்கொடிதாகியவென்மனத்தே
நண்ணுதிருப்பதி யாதெளியோர்க்கருணமுற்றே. (சஉ)

நாமனம்பாவிய ர்புன்சிறுதெய்வங்கணச்சலன்றிக்
காமனம்பாவிய ராவனைவார்பலர்காழரைசே
ரேமனம்பாவிய ரியைக்குநாதனையெங்குருகூர்ப்
பூமனம்பாவிய லாற்றுதிப்பார்சிலபுண்ணியரே. (சஙு)

புண்ணியமந்திர மாமரியக்குடிபோந்திறைஞ்சார்
கொண்ணியமந்திர ஞ்செய்தறியார்நற்குருப் பெற்றுமா
னண்ணியமந்திர ஞ்சங்காழிவாய்ந்திலர்நாரியர்பா
லண்ணியமந்திர டோள்புணராநிற்பராய்விலரே. (சச)

ஆயவிலங்கையர் போன்மனமேயுய்யுமாறெவனே
மாயவிலங்கையர் கோனொடுமாய்தரவந்துதித்தார்
தூயவிலங்கையர் சீரரியக்குடிதோன்றியரு
ளீயவிலங்கையர் சீரியநீரினியல்புகளே. (சரு)

இயலுமிசையும் பயிலரியக்குடியீசனருட்
செயலுமிசையும் பண்டாழ்வார்கள் செந்தமிழ்ச்செல்வன்சங்குங்
கயலுமிசையும் கடற்பள்ளியான்கடைக்கண்ணருட்குப்
புயலுமிசையும் பர்கற்பமுமேதிணைபோதரலே. (சசு)

போதிவனத்தின ஞ்சேரரியக்குடிப்புங்கவனம்
போதிவனத்தின ன்சீரலர்மாதுரம்பூண்டவனிப்

போதிவனத்தின னன்மாலைதந்தானஞ்சல்போந்தனனுட்
போதிவனத்தின க்காரொலிகேளென்றன்பூங்கொடியே. (௪௭)

பூதனைக்கோடியவாவி யைப்போலரியைக்கணின்றாய்
பூதனைக்கோடியவாவி யதாகப்புரிந்தளித்தாய்
வாதனைக்கோடியவாவி நின்றேனைமதியின்மிக்க
வாதனைக்கோடியவாவி டுத்தாளுனக்காவதற்கே. (௪௮)

ஆவத்துவந்தன போம்பவம்போம்பிணியாவனபோந்
தேவத்துவந்தன மெய்துநெஞ்சேயிது திண்ணம்புந்திப்
பாவத்துவந்தன ஞ்செய்யரியக்குடிப்பாலன்மல்லைச்
சீவத்துவந்தன ற்போர்புரிந்தான்மலர்ச்செங்கழலே. (௪௯)

கழங்கோகநக மணியூசலோகருதாள் சிறிதும்
பழங்கோகநக மெனலாயினுண்முகம்பார்த்தருளான்
மழங்கோகநக முலையாளைத்தீயமறவரைக்க
தழங்கோகநக ஞ்சுலாமரியக்குடி தங்கத்தனே. (௫௦)

தங்கத்திருக்கலையா யரியக்குடித்தாமமுனந்
துங்கத்திருக்கலையா ங்குப்பெண்ணுக்கினைசொல்லறியா
தங்கத்திருக்கலையா நிற்குஞ்சோதியருவினைகண்
மங்கத்திருக்கலையா லென்கொலோவருள் வாயினியே. (௫௧)

இனியவளைத்ததி யுண்டாயர்பாடியிலீசன்வில்லைக்
குனியவளைத்ததி ருக்கையரியக்குடிக்கரசே
பனியவளைத்ததி ர்பாற்கடலாயின் றென்பாவைநைவாள்
துனியவளைத்ததி பார்த்தளிப்பாய்சுடர்தோன்றுமுன்னே. (௫௨)

தோன்றலையானக துந்துபிக்குச்சுடர்த்தொல்லுவணக்
கோன்றலையானக வியூரரியக்குடிமுதலை
வான்றலையானக த்தேதுயில்வானைவணங்ககில்லா
தேன்றலையானக த்தின்றுவைப்பானெண்ணமெய்தினனே. (௫௩)

எய்துவண்டானமன்ற ண்ணரியக்குடியீசனையே
வய்துவண்டானமன்ற ச்சிசுபாலனும்வாய்ந்தனன்சீர்
செய்துவண்டானமன்ற ற்றூர்புனைந்துநெஞ்சேபணியான்
மெய்துவண்டானமன்ற ன்செயல்போமெனல்வேண்டுவதே. (௫௪)

வேண்டாதவனத்திரு டினன்றொண்டருள்வெய்யவிருட்
டோண்டாதவனத்திரு புரிக்கோனைத்தொலைத்தெண்ணிலார்க்
கீண்டாதவனத்திரு னரியக்குடியீசனற்றூ
டீண்டாதவனத்திரு லழியாதன்புசெய்துநெஞ்சே. (௫௫)

செய்தனஞ்சேவக மாலரியக்குடித்தேவைத்துதி
பெய்தனஞ்சேவக ளுமடியோற்கருட்பேறளிப்பா
னெய்தனஞ்சேவக லார்தொழுவானருளேயுண்டுவே
ளுய்தனஞ்சேவக ளேகுதுமோவிங்குரைமின்களே. (௫௬)

உரகத்துவச ன்முதலானமன்னரையொப்பரிதாம்
நரகத்துவச மதாக்கரியக்குடிநாதமலர்க்
கரகத்துவச னத்தாலனைப்போற்றுங்கருத்தருளிக்
கிரகத்துவச ன்மநாடாதுசெய்புனைக்கிட்டுதற்கே. (௫௭)

கிட்டாதபத்திர த்தின்மலையேந்தியகேசவமின்
விட்டாதபத்திர விக்கிணையாழிவிமலவெழுத்
தெட்டாதபத்திர ளாரரியக்குடியீசவெற்குன்
கட்டாதபத்திர த்தண்டுளவேனுமுகந்தருளே. (௫௮)

கந்தமுருக்கமலர் மீதுகிரக்கடற்பிறந்த
சந்தமுருக்கமலர் வாய்த்திருநண்பர்தானவரைச்
சிந்தமுருக்கமலர் ச்செற்றரியைக்கண்சேர்ந்தடியார்
பந்தமுருக்கமலர் க்கடியோமென்கொல்பற்றெமக்கே. (௫௯)

எமக்கோதியக்கமன ஞ்சோரவின்னரியக்குடியாய்
நமக்கோதியக்கமன ப்பாசங்கொண்டடர்ஞான்றுமுகி

ஆமக்கோ தியக்கமன நகிலார்வயிற்றோங்குசென்மக்
கமக்கோ தியக்கமன ர்த்தமதாம்வி தங்கண்டருளே. (சுo)

கண்டிக்கவாவிய வின்மொழியம்பெனுங்கண்கமுகக்
கண்டிக்கவாவிய ஞயயர்வாளவள்கண்கலக்கங்
கண்டிக்கவாவிய லாரணங்கண்டறியாய்முனுண்ட
கண்டிக்கவாவிய சீரரியக்குடிக்கற்பகமே. (சுக)

கற்பகலாதவ ர்வாழரியக்குடிக்கண்ணமுன்போர்
நற்பகலாதவ ன்போய்மறையச்செய்தநாதவெற்பேய்
பொற்பகலாதவ ருள்ளந்தொறுந்தனிப்போந்துவைகு
மற்பகாலதவ ன்கண்ணடியேனுய்யுமா றருளே. (சுஉ)

மாறுவருந்தமி ழ்தானரைமூப்பற்றவானவர்தங்
கூறுவருந்தமி ற்கூடித்தொழுமரியக்குடிக்கண்
ணேறுவருந்தமி ழ்மாமறையாலுன்னியல்புசற்றுந்
தேறுவருந்தமி யேனுய்யுமாறெங்ஙன் சீர்முகிலே. (சுங)

முகுளத்தனத்தர ம்மாதர்நல்லாரிடமொய்த்தமயன்
மிகுளத்தனத்தர ந்தீர்த்தருள்வாய்தமிழ்வேதஞ்சொற்ற
வகுளத்தனத்தர வக்கிரியின்வந்துவாழ்மரைசேர்ந்
தகுளத்தனத்தர வத்தரியக்குடித்தானத்தனே. (சுச)

தானத்தனுதன வென்றளிப்பாட்டிசைதண்டுளவக்
கானத்தனுதன ந்தாமரையாள்கணவன்றிகிரிப்
பானத்தனுதன ரியக்குடியனற்பாதநண்ணு
வீனத்தனுதன டியனெவ்வாறுய்வனிப்படிக்கே. (சுரு)

இப்போதுவந்தன கேண்மனமா தியவின்றுவணங்
கப்போதுவந்தன மாதரசேசென்றுகைகுவித்தெந்
தப்போதுவந்தன ருட்பார்வைசெய்வன்செந்தாமரையி
னப்போதுவந்தன ஞ்சேரரியக்குடியப்பனின்றே. (சுசு)

அப்போதனத்தன னலம்புவியனிலம்விசும்போடு
அப்போதனத்தன ஞ்சீரரியக்குடியான்கையின்வி
அப்போதனத்தன ற்றுளடைந்தேனெமனுரடரும்
அப்போதனத்தன ரும்பாவந்தீர்த்தருளப்பெரிதே. (சுஎ)

பெருகந்தமாதனத்தின் பான்மிகுந்துபொன்பெற்றவெற்போ
டருகந்தமாதனத்தின் பாற்செல்சீரரியக்குடியா
யிருகந்தமாதனத்தின் பாலையாயுன்னியல்புசொல்லி
யுருகந்தமாதனத்தின் பாலுமுண்டிலளோய்குவளே. (சுஅ)

ஓயாமலரைக்கண மூமெய்வான்மதனோர்ந்தும்வைவாள்
தாயாமலரைக்கண ம்புவியோதுமித்தன்மைசெய்தான்
காயாமலரைக்கண ம்மரியக்குடிக்கண்ணன்முன்ன
மாயாமலரைக்கண த்தானின்பின்சென்றமாயவனே. (சுக)

மாயத்தருக்கஞ்செய்வா ர்பலமாதர்மதனெனிலோ
வீயத்தருக்கஞ்செய்வா ன்மடந்தாயின்றுமேவிச்சொலாய்
சேயத்தருக்கஞ்செய்வா ரிசத்தாருக்குச்செப்பரிய
வாயத்தருக்கஞ்செய்வா ரரியக்குடியா திபர்க்கே. (எ0)

ஆதிபராவின மேய்த்துவந்தாரரியக்குடிவாழ்
சோதிபராவின சீருடையார்முனஞ்சொற்பெயரொன்
றோதிபராவின ம்போல்வார்க்கெல்லாநற்றுணையவரே
போதியராவின லம்பெறுமாறுழல்புன்மைநெஞ்சே. (எக)

நெஞ்சகமேவசனத்த டியார்க்குநெடுங்கடல்சூ
ழஞ்சகமேவசனத்த னெம்மானரியக்குடியான்
கஞ்சகமேவசனத்த னற்றுள்பெறுங்காலமுண்டோ
வஞ்சகமேவசனத்த னங்காயமனமெனக்கே. (எஉ)

மனவாதரவரு ள்செய்தரியக்குடிமாநகர்க்கு
மனவாதரவரு வாய்கதிதான்கொடுவல்வினையேற்

சினவாதரவரு ஞ்சிங்காதனத்தினிற்சேர்ந்திருப்பாய்
சினவாதரவரு ளுங்கடையேன்கொடுஞ்சென்மமட்டே. (எரு)

அடுமையிலாறு முகன்முன்னவன்றந்தையங்கியும்போர்க்
கடுமையிலாறு வகைசெய்துவாணன்கரந்துணித்தான்
நெடுமையிலாறு ணர்ப்பூம்பொழில்பற்பலநேர்ந்துமதுப்
படுமையிலாறு கொள்சீரரியக்குடிப்பாவனனே. (எச)

பாவனசங்கரி கொய்நீரரியைப்பதியுடையாய்
மாவனசங்கரி தாழ்திருமான்வளர்மார்பவென்றுந்
தாவனசங்கரி யப்பலவேர்கொடுதாழும்வினை
யாவனசங்கரி த்தாளுனதம்பொற்கழலளித்தே. (எடு)

கழலாவளையுமதி யாமுணர்வுங்கலந்துவிண்மீ
தழலாவளையுமதி யுமென்றுமரியக்குடியாய்
நிழலாவளையுமதி தேசினுழியுநேர்ந்தகையிற்
குழலாவளையுமதி யாத்தயிருங்கொடுண்டவனே. (எசு)

கொடிச்சந்தனங்கட விப்பாண்டவர்க்கருள்கொண்டளித்தான்
கடிச்சந்தனங்கட ஞ்சேரரியக்குடிக்கண்முகில்போற்
படிச்சந்தனங்கட வுண்மாலெய்தானினும்பாற்பகரு
மடிச்சந்தனங்கட மையன்றியாவொருவன்புளவே. (எஎ)

ஒருவாரணங்கரவா லழியாதருளுத்தமரீ
ரிருவாரணங்கரவா வரியக்குடியீசர்மலர்
தருவாரணங்கரவா ள்விழிக்கேற்றவர்தாட்கன்பரோ
வெருவாரணங்கரவா னெஞ்சமேநம்புமெய்யெனவே. (எஅ)

எனக்காதரவரு வான்கதியார்க்குமிழிதொழிலேன்
சினக்காதரவரு ம்பைமேற்பலநடஞ்செய்துமவன்
றனக்காதரவரு ள்செய்தளித்தான்சென்றுதாள்வணங்கிற்
கனக்காதரவரு மூய்யரியக்குடிக்கார்வண்ணனே. (எக)

காராரவத்தனை நாணெலியாரமர்க்கண்ணெதிர்ந்த
நேராரவத்தனை யர்ப்பாழ்படுத்துநிமலமர்மப்
பேராரவத்தனை வில்லாவரியைப்பெருமமிகப்
பாராரவத்தனை க்கட்கடைநோக்களிப்பாய்பரிந்தே. (அ0)

பரசக்கரசங்க ரன்றுதைநேர்சொலும்பான்மையரோ
வரசக்கரசங்க மன்னரியக்குடியப்பன்வெம்போர்
விரசக்கரசங்க மோர்கணப்போதினின்வீய்த்தபிரான்
கரசக்கரசங்க லாஞ்சனைபெற்றமகான்களுக்கே. (அக)

பெற்றமகவினை வாகனங்கொண்டவன்பேரிடர்க
ளற்றமகவினை யாளர்கள்வாழரியைக்கணெய்தார்
நற்றமகவினை யச்சேயைப்பெண்டிநைச்சுவொன்
கொற்றமகவினை வாரொழிப்பானைக்கொண்டனரே. (அஉ)

கொண்டலைக்கண்டினை யொப்பாங்குழன்மொழிக்கொம்பனையாள்
வண்டலைக்கண்டினைப்போதுங்கொளாடுயில்வாரி தியை
மண்டலைக்கண்டினை வாளரியக்குடிவாசபர
விண்டலைக்கண்டினை நிற்கடிமைத்தொழில்வேண்டினளே. (அங)

வேண்டவரந்தக வின்னருளோடுமிகவளிப்பார்
பாண்டவரந்தக ரக்குழன்மாதெனும்பாவையைமுன்
னுண்டவரந்தக ன்மைந்தர்செய்தீமையவையொழிவித்
தீண்டவரந்தக வாரரியக்குடியெய்துமினே. (அச)

எய்தச்சமருக்கனை வரும்வம்மென்றிலங்கையரைக்
கொய்தச்சமருக்கனை மாற்றரியக்குடிக்கிறைவா
மெய்தச்சமருக்கனை வாளியான்மெலியாதின்னருள்
செய்தச்சமருக்கனை யுயிர்க்காகியசீதரனே. (அரு)

சீதரவாவிக்கு ண்மானதவாவியிற்சேரனங்கள்
போதரவாவிக்கு டிசேரரியைப்பொலன்பதியாய்

நீதரவாவிக்கு ண்டாய்க்கண்சுழன்றுநிலைமைகெட
மாதரவாவிக்கு ழுமும்பொழுதத்துன்வண்சரணே. (அசு)

சருவாவருத்தியவன் ரோளமரர்க்குத்தண்சுதைமுன்
குருவாவருத்தியவன் சீரரியக்குடிதொழுதாங்
கொருவாவருத்தியவன் றிருநாமங்களோதுநெஞ்சே
மருவாவருத்தியவன் கண்மைநோய்மூற்றுமாய்தரவே. (அஎ)

தரவாகனத்தனை த்தேவாதிதேவர்கடங்கட்குப்புள்
வரவாகனத்தனை வோர்களும்போற்றிடவந்துன்னடி
பரவாகனத்தனை வில்லாவரியைப்பதிக்கரசே
கரவாகனத்தனை வெங்கூற்றுவன்ரொடர்காலத்திலே. (அஅ)

காலச்செயலை க்கடந்துய்யநின்செங்கடைக்கணருள்
சாலச்செயலை யென்னோநின்னையன்றித்தயாபரர்யார்
கூலச்செயலை வண்டுந்தேனுநண்பசல்கூடுமங்கண்
கோலச்செயலை வனஞ்சேரரியக்குடியப்பனே. (அக)

குடியப்பனகனை க்கொண்டானரியக்குடிப்பெருமான்
மடியப்பனகனை ச்செய்தானைவன்சிறைவைத்தவனைக்
கடியப்பனகனை ந்தூர்பாண்டவர்க்கெனக்காய்சினத்துக்
கொடியப்பனகனை யேற்ருனடிக்கன்புகூர்மனமே. (கo)

கூர்மத்துவந்தனை க்கொண்டுநின்மேன்முனங்கோத்திரமா
மோர்மத்துவந்தனை சீரரியக்குடியுத்தமனே
பேர்மத்துவந்தனை வர்க்கும்பொல்லானென்மிஞ்ஞகத்தணிவான்
ரூர்மத்துவந்தனை நாளுஞ்செய்திநின்கழற்சார்வதென்றே. (கக)

என்ரோதிவாகரனை க்காண்பனிவ்விடரோகும்வண்ணஞ்
சென்ரோதிவாகரனை க்கூப்பிவந்தனைசெய்துமலர்
துன்ரோதிவாகரனை ச்செற்றவற்கயன்ரொல்லுமைதோ
ளொன்ரோதிவாகரனை யற்கரியையொருமுதற்கே. (கஉ)

ஒருமுதலைக்கடை ப்பட்டதைக்கொன்றவனேசையியம்
பொருமுதலைக்கடை சேரரியைக்கிறைபுன்னமைவெங்
கருமுதலைக்கடை யாவண்ணஞ்செய்தவன்கண்ணனிற்க
வுருமுதலைக்கடை வீழும்பிறதெய்வமுன்னினெஞ்சே (கரு)

உன்னித்திருக்கவினை போமனமெனவோதுகிற்குஞ்
சென்னித்திருக்கவினை யத்தொடுநெங்கைசெம்மல்சொற்ற
கன்னித்திருக்கவினை ந்திறைஞ்சாய்பொற்கமலத்தில்வாழ்
பன்னித்திருக்கவினை ச்சேரரியைப்பதியினையே. (கச)

பதவிதந்தாமத னேகம்பொய்நூலும்பலபலவே
சதவிதந்தாமத தெய்வமுமாங்கவைதாநிலையோ
வுதவிதந்தாமத யானைக்கரியைக்கண்ணேங்கவற்கே
நிதவிதந்தாமத லமொன்றுமேயென்றுநித்தியமே. (கரு)

நித்தியமத்தவரை யாழியேந்தியநின்மலரைப்
பத்தியமத்தவரை காத்தரியைப்பதியிலென்று
மொத்தியமத்தவரை ப்பணிகொண்டருளுத்தமரை
நத்தியமத்தவரை க்கருதோம்வினைநைவணமே (கரு)

வணங்காரனையவரு க்கரியக்குடிவாசர்க்குமுன்
னிணங்காரனையவரு க்கங்கொன்றூர்க்கன்புற்றிவ்வண்ணமாய்ப்
பிணங்காரனையவரு ம்பிணங்கிப்பழிபேசிநிற்ப
வணங்காரனையவரு த்தமுற்றூட்கினியார்துணையே. (கஎ)

இனித்தந்தவாரண ங்காணுமனின்றவெழில்வடிவந்
தனித்தந்தவாரண ங்காணநின்றூய்பகறன்னிலிரா
முனித்தந்தவாரண த்தன்றரியக்குடிமுன்னவனே
யுனித்தந்தவாரண ங்குன்குணம்பேரன்றியோதிலளே. (கஅ)

ஓதிலங்காதிபராசர ந்தைப்படவுங்கரவாற்
கோதிலங்காதிபராசர ன்றுய்யவுங்கூரரியைத்

தோதிலங்காதிபராசர ண்டந்துயருடலத்
தீதிலங்காதிபராசர ன்செப்பருஞ்சீர்மையனே. (கூகூ)

சீராகவாகவத்தா லசுரர்ச்செற்றதென்னரியைச்
சீராகவாகவத்தா ர்பிணியான்மிகுசென்மத்தென்சீ
சீராகவாகவத்தா னொளிநீங்கென்றிற்றீவினையாற்
சீராகவாகவத்தா மாழ்குவேற்கருள்சீர்பெறவே. (கoo)

திருவரியக்குடித் திரிபந்தாதி

முற்றும்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நமஃ.

திருவரியைச் சிலேடை வெண்பாமாலை.

இஃது

இராமநாதபுரம் சீமை

சூரியங்குட்டமிருந்து அரியக்குடி வந்திருக்கும்

வேலாழர்

கிருஷ்ணமாசாரிய ரவர்கள்

இயற்றியது.

மேற்படி அரியக்குடி

ராம-சா-அரங்கநாதச்செட்டியார்,

லெ - ராம - அரங்கநாதச்செட்டியார்,

சா-கி-அரங்கநாதச்செட்டியார்

இம்மூவர்களாலும்

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1902.

பிலவஸு மாசிமீ.

ஸவ-ம் விஷ-யம் ஜமக.
ண

ஸ்ரீ உகோராநா-ஜாயநம:

திருவரியைச் சிலேடை வெண்பாமாலை:

காப்பு.

மண்பானு ருகவினை மாற்றரியை மாலடிக்கு
வெண்பானு ருக விளம்புதற்குத்—தண்குளனுட்
பொன்குருகு வாய்குருகைப் பூசுரர்கோன் பாதமுன்னி
நன்குருகு வாய்மனனிந் நாள். (க)

அம்பெருமா னுர்வயிற்றி னுங்கருவி னுடாம
லெம்பெரு மானு ரிணையடியை—நம்பாத்
துதித்திருப்பாய் நின்றன் றொழிலா லிடர்கள்
விதித்திருப்பாய் நின்றநெஞ்ச மே. (உ)

யதிக்கோன் கருணைக் கிலக்காகி முத்தி
பதிக்கோ வலனடியைப் பற்ற—விதிக்கு
மறையந்த வாசிரியர் வண்பதஞ்சேர்ந் துய்வோந்
தறையந்த வாசிரியத் தான். (ங)

நூல்.

பொன்மலிபூங் கோயில்களும் போர்க்களனுஞ் சொற்கதிரை
யன்ன மணியா ரரியையே - மன்னுபுகழ்
வேங்கடத்து வந்திருப்பார் மிக்கவடி யார்களடி
யோங்கடத்து வந்திருப்பா ரூர். (க)

வீரக் களமர்கணெல் வேடர்பர தர்க்குமது
வாரக் களந்தூற் றரியையே—கூரப்
பிரமன் றுதித்தார் பெருமையைவர்க் காகிப்
பரமன் றுதித்தார் பதி. (உ)

சீறினுஞ்சி ராரியர்க்குச் சீடரூண் மாமடையோ
ராறுவகை யாக்கு மரியையே—யேறுபுகழ்ப்
பஞ்சவடி வந்தான் படைத்தான் சனகியொடும்
பஞ்சவடி வந்தான் பதி. (ங)

விஞ்சும் விளைநிலப்பால் விண்டுபத்தி வேதியர்பா
லஞ்சங்கங் கோடா வரியையே—மிஞ்சுந்
தருமவலை வாய்ப்படுத்தார் சத்தாங் குசேலர்
தருமவலை வாய்ப்படுத்தார் சார்பு. (ச)

பேரிடத்தில் லோரனத்தைப் பேசுமறையோர் மனத்தை
யாரிடத்து மூட்டு மரியையே—பாரிடத்துப் [ரில்
பொற்கடங்கொண் டாடினூர் பொங்கிலங்கைக் கோன்போ
மற்கடங்கொண் டாடினூர் வாழ்வு. (ரு)

பாடு மதங்கியரும் பைந்தொடியார் நல்லணியு
மாடகத்தி னூடு மரியையே—நீடுங்
கடலம் படைத்தார் கனமா முயிருக்
குடலம் படைத்தா ருவப்பு. (சு)

பூவின் வள மல்கு புறவு மணிமறுகு
மாவினத்தங் கூரு மரியையே—வாவி
யொருவா ரணங்கடந்தா ரோதயனுக் கன்றி
ரிருவா ரணங்கடந்தா ரில். (எ)

பொங்குதவ வேதியரும் பொற்புடைத்தோண் மைந்தர்களு
மங்கசனை நேரு மரியையே—நுங்கமுதம்
வானவருக் கங்களித்தார் மாமுனிவ ருள்ளத்து
ஞானவருக் கங்களித்தார் நாடு. (அ)

தேசுதிக ழந்தணர்க்குந் தீம்பாலைக் கன்றினுக்கு
மாசுரந் தீயு மரியையே—மாசொழிந்த
வாய்ப்பாடி யங்குரித்தா ராளடிமை செய்வர்மனம்
வாய்ப்பாடி யங்குரித்தார் வாழ்வு. (கூ)

சங்கதிர்கோ னேரியுந்தா தாவாயி னோர்முகமு
மங்குமுத மண்டு மரியையே—பொங்கிவரு
மேகத்தி னங்கடுத்தார் மெய்ப்பரம வீடென்னு
மாகத்தி னங்கடுத்தார் வாழ்வு. (கo)

கம்புருவக் கண்டத்தார் கண்ணு மவர்முகமு
மம்புருவ ங்காட்டு மரியையே—பம்பு
மரங்கத் திருத்தலத்தா ராட்படார் தம்மந்
தரங்கத் திருத்தலத்தார் சார்பு.. (கக)

நச்சு விழிமாதர் நன்மனமும் யாவருமா
லச்சமய நாடு மரியையே—நச்சினர்க்காப்
பொங்கலையப் புக்கடைந்தார் போற்றியவென் மாமனத்துக்
கங்கலையப் புக்கடைந்தார் காப்பு. (கஉ)

மெய்விஞ் சினர்க்குளமும் வேதியர்க்குத் தத்துவமு
மையஞ் சமையா வரியையே—துய்யசுட
ரஞ்சக் கரந்தரித்தா ராதவன்சேய்க் காயவன்முன்
னஞ்சக் கரந்தரித்தா ரார்பு. (கங)

செப்பு மலர்க்காவுஞ் சென்றெதிரும் வேள்கரமு
மப்பமரஞ் சாரு மரியையே—துப்புடைத்தோட்
சந்த வரைப்பணிந்தார் தண்டகா ரண்ணியத்துள்
வெந்த வரைப்பணிந்தார் வீடு. (கச)

பொங்குசெல்வர் மாமனையும் போரரச ரின்முன்னு
மங்கமலை வீடா வரியையே—யிங்கமரி
லச்சங் கரற்களித்தா ரையமிட்ட தன்மையின்முன்
னச்ச ங்கரற்களித்தா ரார்பு. (கரு)

நீரவள நெற்கதிரு நீடுபேணை யிற்கரும்பு
மார முதிரு மரியையே—நேரார்
செருக்கொழித்த தீரத்தர் தெண்ணீர்ப் பொருனைத
திருக்கொழித்த தீரத்தர் சேர்வு. (கசு)

சங்கையில்வேள் வித்தவருந் தண்குழலார் முன்கைகளு
மங்குசங்கைக் காக்கு மரியையே—தங்கிடையர்
துங்கமட மானுர் துகில்கவர்ந்தா ராழியிடை
வெங்கமட மானுர் விருப்பு. (கஎ)

மாசிறவத் தோருமந்தி வந்தனஞ்செய் வேதியரு
மாசமனங்கூரு மரியையே—பேசு
வரமூன்று மங்கையார் மண்டலத்தில் வானின்
மரமூன்று மங்கையார் வாழ்வு. (கஅ)

மாசின்மிகு மானிடர்பான் மாதவர்க்கு மங்கையர்க்கு
மாசி வராத வரியையே—மூசு
மரவச் சயநத்தா ரண்டங்கலங்கு
மரவச் சயநத்தா ரார்பு. (௧௧)

மைந்தர்கள்பா லூடலிடை மாதர்கட்கும் வேதியர்க்கு
மந்தகர ணங்கோ டரியையே—புந்தி
வருவர்க்க மண்டலத்தான் மாயா தெனைச்செய்
யொருவர்க்க மண்டலத்தா னூர். (௨௦)

மேவு தனுவீரர் வெரிநுநல்லார் வாள்விழியு
மாவம் பொறுக்கு மரியையே—கூவிவர
யிவ்வீட ணற்கினியா ரீங்கெதிரென் றுரெளியே
னவ்வீட ணற்கினியா ரார்பு. (௨௧)

வெம்போர்வேற் கண்ணார்கண் மென்முகமுங் கொங்கையுஞ்
லம்போ ருகமாய ரியையே—யும்பர்க் [சொ
கரசரணத் தன்கனவா னன்னான் கமலக்
கரசரணத் தன்கனவான் காப்பு. (௨௨)

நீடெழின்ம தங்கியரு நிந்தையையன் னார்கதுப்பு
மாடிக் களிக்கு மரியையே—கூடுங்
குகவே டனைநட்டார் கூவுலகோற் பத்தி
தகவே டனைநட்டார் சார்பு. (௨௩)

செம்போத ஞானியர்கண் சித்தசன்கை யாங்களியி
னம்போ டிவரு மரியையே—வெம்பு
முதுசூ தனனத்தன் மூட னெனையாண்
மதுசூ தனனத்தன் வாழ்வு. (௨௪)

பாரநிதி யீட்டுனர்க்குப் பல்குதிசொன் னரியருக்
காரம்பந் திக்கா வரியையே—போரரியாய்
வந்தவிருந் தூணினன் வாழ்விதுரன் பொன்மனையிற்
சந்தவிருந் தூணினன் சார்பு. (உரு)

கூருமக மந்தணருங் கோற்றொடியார் மென்முலையு
மாரவண்டர்க் காக்கு மரியையே—சீரணங்காஞ்
சொற்கரும் பாகத்தர் தூவு சுடர்நீலக்
கற்கரும் பாகத்தர்காப்பு. (உசு)

தூவிநில வைப்புலெனத் தூய்மரக தச்சுடரை
யாவினந் துய்க்கு மரியையே—மேவிமுனந்
தீம்பாற்கட் டுண்டார் சிறியவிடைச் சோதைகையிற்
றும்பாற்கட் டுண்டார் தலம். (உஎ)

சாயாத வீரர்களுந் தாழ்வின்மடைச் சாலைகளு
மாயோ தனமூட் டரியையே—மேயார்பால்
பூமிதந்த வாரத்தார் பொன்னடிமேல் வீழ்வருண
சாமிதந்த வாரத்தார் சார்பு. (உஅ)

சீர்மறையோர் நாவுந் திருவடிசேர்ந் தார்க்கரியு
மாரணங் கொழிக்கு மரியையே—யோர்வரிய
வந்தத் திருக்குடையா ராட்படார் தங்கருவின்
பந்தத் திருக்குடையார் பற்று. (உகூ)

சீராய்த் திகழ்புறவுஞ் செஞ்சபையு நூலினிடை
யாராய்ச் சியர்மே வரியையே—யேரார்
திருத்துளவத் தார்க்கரியார் செப்பத்தார்க் கன்றிக்
கருத்தளவத் தார்க்கரியார் காப்பு. (ரு0)

கஞ்சவய லின்மடவார் கண்டம்போன் மென்னடைபோ
லஞ்சங் கதியா ரரியையே—யஞ்சார்க்
கடரு மலங்கலா ரம்பொன் மருமம்
படரு மலங்கலார் பற்று. (௩௧)

கோமருவு குன்றுகளுங் கோபாலர் கொட்டில்களு
மாமருவி வீழு மரியையே—சேமமிகு
மக்கரங்க ளேந்தா னமர்சரிய வாணன்றோ
ளக்கரங் களேந்தானகம். (௩௨)

மச்சவயற் கண்ணும் வயவீரர் தம்மனத்து
மச்சங் குதிக்கு மரியையே—நச்சார்க்
கருகாப் பழிப்புடையா ரண்ட முழுதீன்
றொருகாப் பழிப்புடையா ரூர். (௩௩)

முத்திக் கிறையிசையு மூரல்முகத் தார்தனமு
மத்திக் கடுக்கு மரியையே—யத்தருக்கு
வாரத்தி னஞ்சிடுவார் வாழடியார் துன்பமுறில்
வாரத்தி னஞ்சிடுவார் வாழ்வு. (௩௪)

மானவிற்கா நல்லறமும் வாவிகளு மொண்கமலத்
தானனத்தார்ப் பார்க்கு மரியையே—மானமுன்கைக்
கொண்டவத்திக் கோட்டினுர் கோளாருங் கல்லுருவ
மொண்டவத்திக் கோட்டினு ரூர். (௩௫)

பம்பிவருந் தேனதியும் பைம்பொற் கொடியினமு
மம்புலிமா னுடு மரியையே—வெம்பேய்
நகில விடமடுத்தார் நற்பரமான் மாவா
யகில விடமடுத்தா ரார்பு. (௩௬)

விஞ்சுபுனல் வண்டலினு மீயுயர்நெற் போரினத்து
மஞ்சங் குழுதா மரியையே - யிஞ்சித்
துவரா நகரத்தார் தொல்லரக்கர் மாய்த்த
தவரா நகரத்தார் சார்பு. (௩௭)

பாழி லெவரும் பசும்பொன்மதில் சூழகழு
மாழ மதியா வரியையே—வாழ்வு
மருவிக் கிரமத்தார் மானிடரையாள்வார்
திருவிக் கிரமத்தார் சேர்பு. (௩அ

பொம்மலிளஞ் சேயும் போதமது வின்பொழிலு
மம்மஞ் சுவைக்கு மரியையே—விம்முந்
திருவஞ்ச னுத்திரியார் தேருமெனை யென்று
மொருவஞ்ச னுத்திரியா ரூர். (௩௯)

எஞ்சா வணிமறுகு மெய்தரன்வேட் கானனமு
மஞ்சாரு வாயு மரியையே—விஞ்சத்தாங்
காட்டு வரம்பொழிந்தார் காணுதார் மாதவர்க்கு
வேட்டு வரம்பொழிந்தார் வீடு. (௪௮)

உங்குறைவ ராருமறை யோரும் பவித்திரத்தி
னங்குலிக ளாவா ரரியையே—பொங்கி
மனதுகவி மாலையார் மாந்தர்க் கருளா
ரெனதுகவி மாலையா ரில். (௪௧)

பேர்பெறு மாவணமும் பீடுடையார் வாய்மொழியு
மாரவ மிகுக்கு மரியையே—யார்வமிகுந்
தொண்டர் பதத்துகளார் சொற்கொண்டார் தொண்டல்லா
வண்டர் பதத்துகளார் வாழ்வு. (௪௨)

வம்பின் மறையோரு மாமறுகுமந்திரத்தா
லம்பரத்துவந்தே றரியையே—நம்பு
நரமடங்க லாய்வந்தார் நான்மறைநூல் வேதச்
சிரமடங்க லாய்வந்தார் சேர்வு. (௪௩)

யோக முனிவோரு மோடையின்வண் டானமுஞ்செய்
யாக மிகவா வரியையே—யோகையொடு
மாவனசஞ் சாரத்தர் வந்தடியார் நெஞ்சென்னும்
பாவனசஞ் சாரத்தர் பற்று. (௪௪)

சிந்தனைசெய் சீடருக்குத் தீர்த்தர்களுந் தேனதியு
மந்தரங்க மோது மரியையே—வந்தடையார்
வெப்பமடை யத்திரியார் வேறுகதி யின்றியழை
செப்பமடை யத்திரியார் சேர்வு. (௪௫)

நாய்கர்பா னன்குளப்பா ணுறுதள வம்புயங்க
ளாக மலையு மரியையே—பாகமுடைப்
பத்திசா ரன்பாவார் பத்திமைமா ருவடியார்
புத்திசா ரன்பாவார் போற்று. (௪௬)

வெஞ்சமனைக் கண்டோரும் வேதவிதி வேதியரு
மஞ்சத் தியங்கா வரியையே—நஞ்சடியார்
வெங்கா சலம்விடுத்தார் வேணியர னூர்க்குயர்தாட்
கங்கா சலம்விடுத்தார் காப்பு. (௪௭)

சொன்னந் தியவயலுஞ் சொன்னமுலை யார்களனு
மன்னந் திகழு மரியையே—பன்னியென்றும்
பார்த்திருக்கு டந்தையார் பைந்நா கணைத்துயிலுஞ்
சீர்த்திருக்கு டந்தையார் சேர்பு. (௪௮)

நச்சியதங் கொண்கரைக்கா ணரியரு நந்தனமு
மச்சமகிழ் பூக்கு மரியையே—மெய்ச்சுமலர்க்
கோகனக வத்திரத்தார் கொண்டரையிற் சாத்துபசு
மாகனக வத்திரத்தார் வாழ்வு. (௪௧)

பாங்காம் பரதருமால் பத்தர்களு மாசார
மாங்கா சரிக்கு மரியையே—தாங்குமலை
மானக் கவிகையார் மாமதியி லாவெளியே
னீனக் கவிகையா ரில். (௫௦)

சித்திதரு மாறளியிற் செங்கனக கோபுரத்தி
லத்த ருவந்தா டரியையே—மெத்தமதுப்
போகவனப் பாசுரத்தார் பொற்குருகை மாறனார்
மாகவனப் பாசுரத்தார் வாழ்வு. (௫௧)

செம்பதுமைக் கின்கணவன் சீருந் திருவருளு
மம்பரவைப் பாரா யரியையே—தும்பிச்
சுரும்பிவருந் தண்டுளவன் றுன்னார்தம் போர்மேல்
விரும்பிவருந் தண்டுளவன் வீடு. (௫௨)

வெம்புந் தவருளமும் வீரர்கைய்யின் வேலுமின்னு
ரம்பஞ் சிரிக்கு மரியையே—நம்பிமுனம்
வாரணங்கூப் பிட்டவன்பர் மாகனக நாட்டனைக்கோல்
காரணங்கூப் பிட்டவன்பர் காப்பு. (௫௩)

பஞ்சினடிப் பாவையர்தம் பைங்குழலு மிஞ்சிகளு
மஞ்சுவர்க்க மண்டு மரியையே—கஞ்சனுந்திப்
பூவிவரப் பண் ணினன் புள்ளாங் குழலிடையே
தாவிவரப் பண்ணினன் சார்பு. (௫௪)

நம்பி யடைவாரு நற்பொழில்வாழ் கோகிலமு
மம்ப லவமா யரியையே—வெம்புமலர்
விக்கத் துவைத்தார் விதியா ரரனுரைப்
பக்கத்து வைத்தார் பதி. (௩௫)

செய்யுந் தவர்க்குநூற் செல்வர்க்கு நெஞ்சின்மத
னையம் புதையா வரியையே—துய்ய
தரைக்கண்ணுர் வானத்தார் தம்மா லறிவரியார்
மரைக்கண்ணுர் வானத்தார் வாழ்வு. (௩௬)

வாகமுடை நீர்நிலையு மால்பத்தி செய்வருமுள்
ளாகமட மாய்த்துன் னரியையே—சேகரைசேர்
மாசைவனப் பாருடையார் மாவலிபா லேற்றளந்த
வோசைவனப் பாருடையா ரூர். (௩௭)

நம்பி யடிமைமலர் நங்கைக்குந்தேனதிக்கு
மம்பிகை செய்யு மரியையே—வம்பில்
பரத்துவச னத்தினுர் பண்டைய நால்வேதச்
சிரத்து வசனத்தினுர் சேர்பு. (௩௮)

மூசியெழு பல்சீரு முன்னுமுனி வோர்நாவு
மாசிமய மேவு மரியையே—பாசின்
திருத்துளவப் பத்திரத்தார் தென்னிலங்கைக்கோனுர்
செருத்துளவப் பத்திரத்தார் சேர்பு. (௩௯)

பஞ்சமரும் பத்திமையிற் பைம்பொற்றளிப்பாடு
மஞ்சுகர னுரே யரியையே—விஞ்சுகல்லைப்
பெண்ணுக நாட்டினுர் பேறுபெரும்யோகியர்கள்
கண்ணுகநாட்டினுர் காப்பு. (௪௦)

செப்பும் விருந்துகண்ட சேயிழையா ரும்பொழிலு
மப்பஞ் சமைக்கு மரியையே—யொப்பரிதாம்
பண்டகர வாச்சியத்தார் பாடிமனைதோறளையோ
டுண்டகர வாச்சியத்தா ரூர். (சுக)

நித்த மனையு நெடுமாற் கணிவிழவு
மத்த னயன்கூ ரரியையே—துத்தியராப்
பாயவிரும் பாசனத்தார் பாரில்விட முண்டவர
ணுயவிரும் பாசனத்தா ரார்பு. (சுஉ)

பொங்குந் தனவணிகர் பூம்பொருளு மாளிகையு
மங்குவட்டி னண்ணும் மரியையே—சங்காழி
வாரங்க தாமன் வரைபோன் மணிமாடச்
சீரங்க தாமன் றிசை. (சுஙு)

மன்னு தனத்தவரும் வாவிகளும்பாலி
னன்ன மடுக்கு மரியையே—சொன்ன
மறைக்கண்ணார் சங்கத்தார் வாழ்கூட லாருண்
டறைக்கண்ணார் சங்கத்தார் சார்பு. (சுச)

மெத்துதனர் பால்வறியோர் மெய்நூலின்பாற்புலவ
ரத்த முகக்கு மரியையே—நத்தடிசேர்
மாக வளக்கரியார் வானோர் முனிவருநன்
றாக வளக்கரியா ரார்பு. (சுரு)

மேவாயர் பாடிகளும் வீழ்பொருளீ வோர்கரமு
மாவா னிகழு மரியையே—தாவில்
கவியாமா றன்பணிந்தார் காணப் படைத்த
புவியாமா றன்பணிந்தார் போற்று. (சுசு)

நீக்கு பழியெவரு நேர்ந்தவர்க்குப் பூமகளு
மாக்கமருளு மரியையே—வாக்கின்மிகு
மண்டங் குடியான் மலர்மாலை கொண்டான்பல்
லண்டங் குடியா னகம். (சுஎ)

நந்தின்மிடற் றூர்குழலு நந்தனமும் வண்டளவா
வந்தவள நாறு மரியையே—புந்தி
பரந்தநவ நீதத்தார் பார்த்திபனை வென்றூர்
கரந்தநவ நீதத்தார் காப்பு. (சுஅ)

விஞ்சுகனி யான்மரனும் விண்டுவின் சேவாபரரு
மஞ்சலிகைக் காக்கு மரியையே—தஞ்சாய்ப்
பரகாலன் பாடினார் பார்த்திபன் பாற்றூதாய்
விரகாலன் பாடினார் வீடு. (சுகூ)

வம்போதி மங்கையரும் வார்புனலி னீணதியு
மம்போதி நேரு மரியையே—நம்பேயார்
பூதத்தார் பொய்கையார் போற்றுதமி ழாதரியா
வேதத்தார் பொய்கையா ரில். (எ0)

ஏசில்புல வோர்நாவி லேர்வை ணவர்மதியி
லாசு கவியா வரியையே—கூசித்
தளர்வா மனமானார் தங்கலை பின்னீந்தார்
வளர்வா மனமானார் வாழ்வு. (எக)

மாகலையின் வாணருநன் மைந்தர் புயத்துணையு
மாகுலம றுக்கு மரியையே—தோகைபொருட்
டஞ்சனக வில்லிறுத்தா ரன்றுவிது ரன்குடிலாம்
விஞ்சனக வில்லிறுத்தார் வீடு. (எஉ)

சுந்தரியார் கொங்கையும்போர் தோலாருஞ் சந்தனத்தி
னந்தவரைப் பூட்டு மரியையே—கந்தவனத்
தாரம் பொருத்தா ரடிமேல்விழவருண
ஞரம் பொறுத்தா ரகம். (எங)

தாவறச்செய் யோகியருந் தண்மணித்தீ பக்குழவு
மாவலிப்புக் கொல்லு மரியையே—தாவின்மரைச்
சந்தத் திருக்கர் தனையென்றுங் காணுத
வந்தத் திருக்க ரகம். (எச)

நேசர்பான் மங்கையரு நீடுந்தளிச்சுடரு
மாசை வரையா வரியையே—வாசமுறும்
பொங்கு திரைமுகத்தார் போதமறை நூற்புகலு
நங்கு திரைமுகத்தார் நாடு. (எரு)

கொத்துறுசெவ் வாம்பற் குளமுமறை யோருளமு
மத்துவித மாளா வரியையே—யத்தென்பான்
மாபுரக் காலனுர் வாராதெனையாளு
நூபுரக் காலனுர் நோக்கு. (எசு)

துத்தமொழி யார்விழிக்குந் தோன்றுவருஞ் செல்வருக்கு
மத்தவா ளஞ்சா யரியையே—யத்தி
யெரிக்குஞ் சரத்தா ரிகல்செய் தழித்த
வரிக்குஞ் சரத்தா ரகம். (எஎ)

காரிற் றிகழ்மறுகுங் காவுமெய்து வண்டுரங்க
மாரப்பா ரேரு மரியையே—யோர்விலார்
புல்வி தனமலையார் பொற்புறுதோ ளாலணைந்த
செல்விதன மலையார் சேர்பு. (எஅ)

போனகமூட் டுந்தொழிலைப் பூண்டவரும் வாளைகளு
மானகமுழக்கு மரியையே—மானமிகுஞ்
சீர்மா தவனுமன் சென்றிடந்து கோட்டிடைக்கொள்
பார்மா தவனுமன் பற்று. (எகூ)

தும்பிகுடை கூந்தலருந் தூயதவ ருள்ளுமரு
வம்பலை த்தீரு மரியையே—யம்பிகொண்ட
மச்சத் துருவார் மடியிலங்கைக் கோனென்னு
மச்சத் துருவா ரகம். (அ0)

சித்திபெறும் யோகியருந் தேமொழியார் கண்ணுமுட
லத்திரம னுக்கு மரியையே—நந்திக்
கலக்குமினு ராயணனுர் கைக்குரவை கோத்தா
ரிலக்குமினு ராயணனு ரில். (அக)

ஒகையின்வி ருந்தினர்க்கு மொண்டொடியார் மாதர்கட்கு
மாகமன மெய்க்கா வரியையே—மாக
வுருவஞ் சிறுத்தா ரொழியாவடிவ
மருவஞ் சிறுத்தார் வயின். (அஉ)

கொம்பினிடை யார்விழியுங் குன்றின்மா டக்கொடியு
மம்பரங் கைக்கு மரியையே—நம்பு
மதிச்ச வரியார் மலரோன் செய்வேத
விதிச்ச வரியார் விருப்பு. (அங)

தங்குஞ் சிறுமை தனையெவரு மந்தணரு
மங்கங் கொழிக்கு மரியையே—துங்க
விடவ மலையா ரொழிற்கமலப் பூவி
னிடவ மலையா ரிடம். (அச)

நம்படியார் நாவு நளினிகளு மாழ்வா
ரம்பதிகம் பாடு மரியையே—யிம்பர்வந்த
நாறுதள வம்புயத்தார் நந்தன் மகனுருந்தி
நாறுதள வம்புயத்தார் நாடு. (அரு)

மாதவத்தோர் சாலைகளும் வந்தோ ருடற்பிணியு
மாதனஞ்சி றக்கு மரியையே—கோதைகுழற்
சூட்டி னசையார் தொழும்பரைமீண் டுஞ்சடலக்
கூட்டி னசையார் குடி. (அசு)

மேக்குயர் நல்லறமு மென்பொழில்வே ளைக்குயிலு
மாக்கத் தழைக்கு மரியையே—கோக்குலத்தைத்
தேர்தந்து கைத்தார் செறியுந் தனஞ்செயற்குத்
தேர்தந்து கைத்தார் திகழ்வு. (அஎ)

வம்பவிழ்பூம் வாவிகளு மாதர்நல்லார் தேங்குழலு
மம்பரந்தி ருக்கு மரியையே—வெம்பி
மரமே வியகணையர் வண்கமலப் பூவின்
றரமே வியகணையர் சார்பு. (அஅ)

சீர்பெறுசந் தத்தரவுந் தேமொழியார் தம்மனமு
மார்வந் துவக்கு மரியையே—பேர்விளவில்
வீசிய கன்றூர் விரும்பித்தொழாதவரை
யேசிய கன்றூ ரிடம். (அகூ)

மாறுத தீவினையு மாசற்றூர் தம்மனமு
மாறு வறந்தோ யரியையே—பேறுந்
திருக்கோட்டி நகரத்தன் றீயவரோ டேற்றுத்
திருக்கோட்டி நகரத்தன் சேர்பு. (கூஎ)

நேயத் தளியினமு நீடுசி றைக்குருகு
மாயப் பணைக்கூ ரரியையே—சேய
முகமண் டலத்தார் முழுதுயிருஞ் சென்று
புகமண் டலத்தார் புரி. (கூ௰க)

பாகா ரிசையதனைப் பாணர்களுந் தண்புறவு
மாகா வினிசை யரியையே—யேகிமடு
வோரரவங் காட்டினு ரோதமரி னூற்றுவராம்
வீரரவங் காட்டினுர் வீடு. (கூ௰உ)

சேனைமன்னர் வீதிகளுந் தேகசுத்தி வேண்டினரு
மானை வரையா வரியையே—யீன
முரண கமலத்தார் மொழியிதயத் தெய்தார்
சரண கமலத்தார் சார்பு. (கூ௰௩)

சேயமணி காண்சுடர்க்குஞ் சீர்மைநயம் பாலகர்க்கு
மாயிரந் திசைக்கு மரியையே—வாய்விசையன்
மோக்கவழி காட்டினுர் முன்னெருநா ளாங்கவனுற்
ருக்கவழி காட்டினுர்சார்பு. (கூ௰௪)

தேவரம்பை யொப்பாந் தெரிவையரும் பல்பொருளு
மாவணமு டங்கா வரியையே—யேவமிலா
மாலா கரனுர் வனையுமண மாலைகொண்டார்
சீலா கரனுர் செறிவு. (கூ௰௫)

கொண்டவலை வாவியின்வாய்க் கோதில்குளிர் முல்லையின்வா
யண்டரவ மல்கு மரியையே—மண்டுவினைக்
கஞ்சற் கெடுத்தார் கரத்தாழி முன்கங்கை
மஞ்சற் கெடுத்தார் மனை. (கூ௰௬)

தோகையர்பாற் பிக்குகருந் துங்கவில்லைப் போரரசு
மாகன்னம் வாங்கு மரியையே—யேகிக்
கவித்த நகத்தினுர் கன்ருன்முன் வீழ்த்த
கவித்த நகத்தினுர் காப்பு. (கூ௰எ)

கோலமிட்ட மின்னுர் குழற்கும் பொறிக்கும்பொன்
னுலவட்ட மாட்டு மரியையே—சீலமுடன்
போத மறமொழிந்தார் போற்றரியார்தத்துவநூ
லேத மறமொழிந்தா ரில். (கூ௰அ)

வாயுமன்பின் மக்கடமை வண்புலவோர்மெய்ந்நூலை
யாய்தரத் துய்க்கு மரியையே—மேயொளிருங்
காதுமக ரக்குழையார் கஞ்சன் முதலாமமர
ரோதுமக ரக்குழையா ரூர். (கூ௰கூ)

மங்கையரூ டிக்கழிக்கு மாலையுழ வோர்மாவி
னங்குரத்தை யாக்கு மரியையே—துங்கமுத்தி
யில்வந் தரவிருப்பா ரென்றுமடி யார்க்குப்பயச்
செல்வ ந்தரவிருப்பார் சேர்பு. (௩)

திருவரியைச் சிலேடை வெண்பாமாலை

முற்றும்.

ஸ்ரீமதே ராமாநுஜாயநமஃ.

அரியக்குடி யலர்மேன்மங்கை பிள்ளைத்தமிழ்.

இஃது

இராமநாதபுரம் சீமை

சூரியங்குட்டமிருந்து அரியக்குடி வந்திருக்கும்

வேலாழர்

கிருஷ்ணமாசாரிய ரவர்கள்

இயற்றியது.

மேற்படி அரியக்குடி

ராம-சா-அரங்கநாதச்செட்டியார்,

லெ - ராம - அரங்கநாதச்செட்டியார்,

சா-கி-அரங்கநாதச்செட்டியார்

இம்மூவர்களாலும்

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1902.

பிலவஞு மாசிமீ.

ஸவ-ம் விஷ-ணுமயம் ஜகத்.

ஸ்ரீ: ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

அரியக்குடி யலர்மேன் மங்கை பிள்ளைத்தமிழ்.

பாயிரம்.

நம்மாழ்வார் துதி,

சீர்கொண்ட வாயிரந் திருவாய் மொழிக்கதிர் திசைச் செல விடுத்தவிஞ்சைச், செறியிருள்க ளிந்தச் செகத்தப் புறத் தோடல் செயவுலக காரணன்றன்,

பேர்கொண்ட வடியா ருளக்கமல நெகிழப் பிறங்குபல சமய மென்னும், பிசிதாச னர்மாள வெழுவகுள பானுவின் பீடார் பதம்பணிகுவா,

மேர்கொண்ட முகமா மதிக்குமுன் னுடையாம லெதிர்நின்ற வெனவிலங்கு, மிருகமல மிருகரத் தேந்திப் பவத்துழலு மெம்போலி யர்க்கஞ்சலீர்,

தார்கொண்ட விவ்வடி யடைந்துய்மி னென்பபோற் றகைய
பய வரதமிருகைத், தாங்கியரி யக்குடியினு றையுமலர்
மேன்மங்கை தமிழனு தினந்தழையவே. (க)

ஆழ்வார்கள் துதி.

எறிகடல் வளாகத்தி லபரதச வவதார மிவையென்ன வவத
ரித்தாங், கெவருமுணு மாறுவரியைக்குயின் முகந்தெ
ன்று மினியபுன லாய்விடுதல்போ,

லறியவெவ் வெவருக்கு முரியமொழி யால்வேத வலைகடல்
கடைந்தெடுத்தின், னமுதவுரை யாலிந்த வுலகத்தை யுய்
வித்த வாசிலாத் தேசிகர்களா,

யுறுபொய்கை பூதர்பேய் மழிசைப் பிரான்மாற ரோங்குகுல
சேகரன்சீ, ரொண்புதுவை நகராளி தொண்டர்பா தத்
தூளி யோவிலாப் பாணர்பெருமான்,

மறுவிலா மூலமறை யைத்திருவின் மணவாள மாயனை வலி
ந்துகொண்ட, மங்கைநகர் நாதனென் றிவர்செய்ய பாத
ங்கள் மலரெங்கண் முடியினுக்கே. (உ)

உடையவர் துதி.

பரசமய மெனும்வெய்ய கண்டக தருக்குலம் பாழ்பட நிலத்
திலங்கைப், பற்றுசுடர் வடிவாய பரசுவென வும்பரமபா
வனமுடைக் கமலமா,

னரசனுயர் மதநிலை பெறச்செய் தெடுத்ததொரு வம்பொன்
வெற்றி த்துவசமே, யாமெனவு மொளிர்துய்ய திரிவேணு
தண்டமு மகன்மார்பி னுருவொடுற்று,

விரவுமெழின் மறைநாலெ னத்திகழ கிற்குமுப வீதமுஞ்
சிகையுநேராய், விரிபுண்டரக் குறியும் வேறுதய வாதித்த
விசயமென வார்த்தசெம்மைப்,

புரியாடையும் பொருவி லெதிராச ரிருசரண புண்டரிகமும்
பணிகுவாம், புகரிலா வரியைக்க ணலர்மீது மங்கையடி
புனைதமிழ் நிதந் தழையவே. (௩)

வேதாந்ததேசிகன் துதி.

அம்புவியி னிலையிட்ட நல்வரம்புஞ் சென்றளக்க வருமதி
யாழமு, மணவியைங் குருநெறியி னிறையுமெதி வரனெ
ன்ற வழிவிலா திலகுகுளனின்,

பம்பிசைய வெழுபத்து நாலுமடை வாயின்வழி பாயுரையி
னமுதினோங்கும், படியிடை நிலைஇய பர மேசமான் மல
மென்ற பைங்கூழ்கள் பரசமயமாம்,

வெம்பு கவரிக்குல நிதந்தின்று மாயாது மிகவோம்பு செய
லினை, வேலியென வுஞ்சொன்மழை பெய்துவளர் வித்த
லான் மிசைமருவு குயினென்னவு,

மும்பர்துதி செய்யுநிக மாந்தகுரு வின்பத யுகஞ்சிர முளம்
புனைகுவா, மொழிவிலா வரியைக்க ணுறையுமலர் மேன்
மங்கை யொண்டமிழ் நிதந்தழையவே. (௪)

கூஹ்ஹாவாய ஹ வாஸுவரெ.

திருமால் கமலை சேனையர்கோன் றிருநாவீற னுதமுனி, சீரு
ய்யக் கொண்டார் மணக்காற் சிறந்தார் யமுனைத் துறை
வர்பெருங்,

குருவாநம்பி யெதிப்பெருமான் கோவிந்தாசாரியர் பட்டர்,
குலவேதாந்தி நம்பிள்ளை கோலக்கண்ண பாதர்நெறி,
பொருவா வரங்கேசாரியர்பே ரோங்குங் கேசவாரியர்நன்,
குறுமாவாசர் கேசவரென் றுலககுருக்களா யுய்ய,
வருமாரியர்க டாள்வணங்கி வைணவம்பார் மல்கியெழ, வந்
தைந்துறுப்பு நல்குமெதி வரர்வண் சடகோபரைப் பணி
வாம். (ரு)

முனிவன் முகமா நாரசிங்க முதல்வன் சபரி முறைவழுவா,
முனிவண் சடகோபரை முதலா முப்பான் மூவர்த்தொழு
தேத்தி,
யினிமை யுடன் வைணவக் குறியைந் தெம்போ லியர்க் கீய்
சடகோப, வெதிதாள் வணங்கிச் சடகோபனெதிக்கோ
னிருவ ரெழுந்தனரோ,
வெனவந் துபயமறைப்பொரு டேர்ந்தெய்து மடியார்க் கினி
தருளி, யிவர்பேர் தரித்த வெதிவரனு ரிவர்க்கா ளாகி
யெமதுபவத்,
தனித க்கடருன் சுவறுவிக்குந் தகையாற் றிருமாருனு மொ
வ்வாத், தகையா ரரங்க நாதவெதி த்தலைவர்க் கடிமைபுரி
குவமால். (சு)

அழகியசிங்கர் கட்டளைக்கலித்துறை.

தொழுகாவியங்கணி மாமலராடன்றொடைவதிய
விழுகாவியங்கணி மாசிங்கற்காட்செய்வமேயக்கணே
யொழுகாவியங்கணி யுய்வகைமாயனொடுபொறிக்கா
மெழுகாவியங்கணி கழின்பமோடுமிசைபெறவே. (எ)

அவையடக்கம்.

பாலாழி யின்பெருமை யொருபுனித முணராது பருகுவா
னுற் றோர்ஞமலி, பரிவின்வா யிடினதற் கொருபழியு மெ
ய்தாத பரிசுன்னி யென்புனுவான்,

மேலாய வரியைக்க ணலர்மங்கை சீர்சில விளம்புவா னமை
தலுற்றேன், மேதினியி லஞ்சத்தி னீர்மையுடை நுஞ்செ
வியின் மேவிவெளி றிக்கருகியே,

நாலாய சொற்குற்ற மேவெனது புன்மொழியும் ஞாலத்தி
லுயர்நாவலீர், நபமிசை வருங்கொண் டலைப்புலா லுவரு
ருவ நண்ணுகட னீரணைந்து,

மாலா யுவந்தெவரு முணலான நன்புனலின் வகையெய்து
தகைமையெனவே, மானிலத் தவரினிது கொண்டாட
வினியவாய் வாயுமா லெனமதித்தே. (அ)

பாயிரம் முற்றும்.

ஸ்ரீ உதொரா தொ ஜாய நமஃ.

அரியக்குடி யலர்மேன்மங்கை பிள்ளைத்தமிழ்

காப்புப்பருவம்.

பரமபதநாதன்.

சீர்கொண்ட செங்கமல மலர்மீ தெழுந்தவய சிவவிந்திராதி
யிமையோர், செகதலத் திசைமனிதர் முதலாய பலதேக
செனனவான் மாக்களென்னும்,
பேர்கொண்ட மணியிட் டிழைத்துவேத் தியமுறுப் பெற்றி
பெறு மாயையரணுட், பேணியொரு கோலோச்சு பரம
பத நாதனிரு பீடுறுபதம் பணிகுவாந்,
தார்கொண்ட கொண்டல் செந் திலதவெண் பிறைபுருவ
தனுவமுத மதியமேந்தித், தண்வான மென்னத் தயங்கி
வட வேங்கட தடச்சிகர வெற்பினிந்தப்,
பார்கொண்ட விசையரியை நகர்வந்து குடிகொண்ட பது
மையெம தம்மையொன்றும், பழுதுறு துயிர்முற் றளிக்
குமலர் மீதுவரு பாவையைக் காக்கவென்றே. (க)

திருமகள்.

வண்டினம் பலகோடி மதுவுண்டு றங்குபசு வனவன மடர்
ந்த திருமான், மார்பகல வரையுலா மொருமானெனக்
கலாமயிலென விருந் தொளிகுலாய்க்,
கொண்டமணி நிலையாடி யிற் சுடரு லாந்தனொரு கூரணிநித
ங்கணேக்குங், கோதையருண் மயையொன்று நிக்கிரக
மணுகுறு க்கோமளக்கொடி பணிகுவா,

மண்டியெழு வாசக் கருங்கொண்டலின் கீழொண் மதிய
மென வம்பணிந்து, வார்கொண் டணிந்ததன வண்சகோ
ரங்கள்குளிர் வனசமுக நோக்கவாங்கண்,

கெண்டையென மிளிரங்க ணளியம்பு யத்துலவு கிளையென
முலைக்கணோக்கக், கிளரரியை யலர்மங்கை யைக்கணவன்
முனிவுமுனி கிளிமொழியினைக் காக்கவே. (உ)

புவிமகள்.

உந்தியங் கமல த்தெழுந்துமாயா வலையுறுஞ் சேதனர்க்கெ
லாஞ்சீ, ருயர்பதம் பெற்றதன தெழின்மகன் றந்தபல
வுயிர்முழுது மிடையினேந்திச்,

சிந்தையன் புடனுளு மின்னமுத மூட்டியிடர் தீரவளர் வித்
தருள்செயுஞ், சேயிழை தனைப்புவி மினைத்தேவ தேவ
னொரு தேவியை வணங்கல் செய்வாம்,

வெந்தொழிலன் வன்கண னிராவண னிடுஞ்சிறையின் மே
வியிந்திர னுதியோர், வெய்ய தெறு சிறை வீட்டுமையை
யைக் கோகனக விரைமலர்க் கோயில்கொண்ட,

பைந்தொடியை மணிவெற் பெழுந்துபூப் பலபூத்த பைங்க
னக வல்லியைப்பூம், பார்முழுது தொழுதேத்துமரியை
க்க ணலர்மீது பாவையைக் காக்கவென்றே. (ங)

நீளாதேவி.

கோகனகை வேறு மெனப்பட்டர் நாதனுயர் குலநந்த னத்
தெழுந்து, கோலவரி சந்தனமிசைப்படர் பசுங்கற்ப கோ
மளக் கொம்பரன்னுள்,

சாகையென லாயினிய பாமாலையுங்கொண்ட சரிகுழற் பூமா லையுந், தந்தொரு பரம்புருடனை த்தன வசங்கொண்ட தாய்நீளை யடிகணினைவாம்,

மாகனக வம்போருகச் செய்ய பீடத்து வளர்கலச வம்போ திவாய், வந்ததனையம்புட்க லாவர்த்த மேமுதல வாரித கடங்களேந்தி,

யோகையுட னெண்டிக்கி னிசைநர மதத்தந்தி யொளிர்மலர் நிரந்தபுனலால், யொருமஞ்சனஞ் செய்ய மகிழரியை மலர் மீதி லொண் டொடியினைக் காக்கவே. (ச)

சேனைநாதன்.

ஈவன்ற னங்கைக்கொண்ட பொன்தே திரத்தினுதி யெண் ணிலா வண்டகோடி, யெய்திநிலைகோடாம லென்றென்று முறைகின்ற வேவனடி யம்புயத்துட்,

பவன் பிரம னிந்திரன் முதல்வான நாட்டுக் கொர் பதிகள் முடி பட்டுரிஞ்சும், பலவேறு வடுவுள்ள வச்சேனை நாத னிரு பதகமல மஞ்சலிப்பாந்,

தவநாளு மெவள்பாத கமலத்தின் மிசையும்பர் தருமலரு மம்புயப்பூந், தண்மலரு மென்பொனித ழித்தாருடன் னீப தருமலரு நாறுகிற்கு,

மவமிலா தெவளிலா தான்மராசிக் கொர்கதி யடைதலீங் கரியதம்மா, வவளையலர் மேன்மங்கை யைப்பொருவி லரி யைக்கொ ரரசியைக் காக்கவென்றே. (ரு)

அநந்தகேருடர்.

எக்கால மெத்தேச மெவ்வடிவு கட்குசித வெவ்வடிமை யும்
பல்வடிவா, லினித னுபவித் துரிய சேடமே தற்கென்று
மியலுடைமையிற் சேடனாய்,

தக்கா ரெணுஞ்சேட முறுபொரு டமக்கெலாந் தகைமை
பெற் றரியநியமச், சனகாதி கட்குரு வொருபரஞ் சோதி
யைத் தன்வசங் கொண்டவனை,

யக்காரணன் முன்ன ரெதிர்நிலைக் கண்ணுடி யாமென விளங்
கியெதுபோ, தருள்வதென வேதங்கள் சிறைபாட நிற்
கின்ற வக்கெருடனைத் தொழுவமா,

னெக்காய வினைபோக வுருகன்பர் நெஞ்சென்னு நிலயத்
திருந்துபயமா, நிதியுதவு மரியைக்க ணலர்மீது மங்கை
யை நிமலையைக் காக்கவென்றே. (கூ)

வியூகம்.

சுத்த தத்துவ வடிவ நித்தியர் தமக்கலாற் றொழுவனக் கா
ணவரிதாய்ச், சுடர்தனிலை யுன்னியெளிதிற் றேவர் தொ
ழுது வெந்துயர் செகுத்தருள் பெற்றுநற்,

சித்திபெற வம்போதி வந்துவளர் பரவாசு தேவனு மளிப்
பழிப்புத், திதிசெ யனிருத்த சங்கருடண பிரத்தியுமன
திவ்வியவடி வினருமான,

வித்தக வியூகவவ தாரரொரு நால்வரையு மிகவடி வணங்கி
யெழுவாம், வேங்கட வரைத்தாம முந் திரு வரங்கமொடு
விண்டுவி னகன்மார்பமு,

நத்துமடி யவர்சிந்தை யுங்கமல மாளிகையு நால்வேத சிரமு
மெனவே, நாளுமரி யைக்கண்வள ரலர்மீது மங்கையெழி
னங்கையைக் காக்கவென்றே. (எ)

விபவம்.

எண்ணிட் டளப்பரிய வேதங்க ளொருநான்கு மெத்தகைய
யோகியர்களு, மிறையேனு முணர்கிலா திச்சையின் படி
யாக விவ்வுலகி லவதரித்த,

நண்ணு மச்சங் கமட வாராக நரசிங்க நயவாமனம் பரசு
வின், ஞஞ்சிலம் படைராமர் கண்ண னங்கற்கியெனு நகு
விபவ வடிவர்காக்க,

வண்ணவின் னுதல்வா ணியுமை யிந்திராணி முதன் மங்கை
யர் கழுத்திலிட்டு, வாங்காத பொன்னுணின் வடிவமாய்
மல்குமொரு மங்கலத் தேவுமாகிக்,

கண்ணனம் புருடவுருவங்களா யிலகவெழு கன்னியுரு வெ
வையுமிவளே, காணென முனிக்குழா மோதுமரி யைக்
கண்வளர் கன்னியலர் மேன்மாதையே. (அ)

அந்தரியாமிவேறு.

வேதத் தொகையுஞ் சூரிகளா மேலோர் குழவுமெதிர்கா ண
விதியி னடுவணி டுந்தான விதஞ்செய் தொளிர் முக்குண
வடிவாம்,

பரதப் பகுதிப் பலகை யின்வாய்ப் பங்கேருகன் சங்கரன்
முதலாம், பல்சேதன வக்கம் பரப்பிப் பரமனுடன் வல்
லாட் டயர்கால்,

பேதத் தவர்வல் வினைக்கவற்ருன் மேல் கீழாகப் பெயர்த் துவைக்கும், பெருமை விளையாட் டுடையரியைப் பெரு மாட்டியை யம் மலர்த்திருவைக்,

கோதற் றிலகு முயிர்கடொறுங் குடியா யொருதா னினித மர்தல், கூரந் தரியாமியின் வடிவங் கொண்ட பெருமான் காக்குகவே. (சு)

அர்ச்சாவதாரம். வேறு.

சுரகங்கையிற் புனித மிகுகாவிரிப் பெருகு தூயநதி சூழரங் கந், துன்னுநிதி யாய்வட மலைச்சிகர மேவிவளர் தொல்லை முகி லாய்ப் பிறங்கி,

வரநண்ணு கரிவெற் பிடைப்பாரி சாததரு வாயெது கிரிக் கொர் சுடராய், வந்து மற்றுங் கோயி ருறுமர்ச்சை வடிவான மால்சரண் முடிக் கணிகுவாங்,

கரசுரபி யம்புயமும் விழிவாரிசங்களுங் கனதனப் பதுமமுகி ழுங், கவினுலா முகபற்ப முஞ்சரண கஞ்சமுங் கதுவி யர விந்த பீடத்,

தொருகொடி யெழுந்தென வெழுந்துலக மென்றகனி யுத வுமரி யைக்கரசியை, யுயிரினுக்குயிராய வொருவற்கொரு யிரா மொருத்தியைக் காக்கவென்றே. (ம)

முதலாவது காப்புப்பருவம் முற்றும்.

இரண்டாவது

செங்கீரைப்பருவம்.

பல்வேறு நிலமுந்த மிடைகொண்டொ ரேழாய படியுந்த
ணுயிரத்த, பரிதிமுடி யேந்திநொந் தாகந் துவண்டுவதி பரி
சுன்னி யெனவனந்த,

னெல்வீழ் சிரத்தின்மிசை யடியிட்டு மேனிலாவிடுதலான்
மதியைமீதேந், தெழின்மிகுந் தெழுமாட விடையாடு
மடநலா ரிசைகருஞ் சூன்முகிற்கு,

நல்வாச வகிலூட்டி யம்பொன் வட்டம் பூட்டி நகுமலர்த் தெ
ரியல்சூட்டி, நாறுகுழ னிகர்காண மதிமறு வொழித்துச்
செய் நளிர்பொட் டிடாநுதற்குச்,

செல்வீழ் கரத்தர்நிகர் நோக்கரியை யலர்மங்கை செங்கீரை
யாடியருளே, தென்னாடு கதியெய்த முன்னாடு மொரு
செல்வி செங்கீரை யாடியருளே. (க)

இந்நிலத் தேவரு மிளங்கார்க ளிவையென்ன விணைகருங்
கோட்டு மோட்டி, னெருமையஞ் சாலிவய லிடைமேய்
தல் கண்டுள்ள மெழுசினங் கதுவிமள்ளர்,

துன்னுசூன் முதிர்வளை யினங்கொண்டு வீசவுதிர் சுடர்முத்
தொடுஞ் செறிந்து, தோயவெந் மிசையிலக நின்றவகன்
வானிற் சுலாய்த்திரை யருந்தி யொழுகு,

மின்னுடை முகின்மீது தாரா கணஞ் சூழ மேவுமதி வடிவு
காட்ட, மென்களை களைந்தொல்கு மடநலா ரத்தரளம்
விரிசிறைய புட்சினையெனத்,

தின்னிய கரத்தேந்து மரியைக்க ணலர்மங்கை செங்கீரை
யாடியருளே, தென்னாடு கதியெய்த முன்னாடு மொரு
செல்வி செங்கீரை யாடியருளே. (உ)

முத்தம் பதித்திட்ட முற்றிலுந் தூதையொடு முதிர்பசும்
பொற்பாவையு, மூசொளியி னன்மணி விதங்கொண்டி
ழைத்த வெழின் முற்றுமொரு சிற்றிலிட்டுத்,

துத்தமொழி யின்பேதை மடநலார் மறுகாடு தொழில்புரிய
வங்கைவைவே, ரூடரவிரக் கழல்பதந் தொடரவண்டர்
பொற்குஞ்சி தொடரச் சிறார்கள்,

கொத்துவிடு சிறுதேர் சிதைப்பநொந் தாயாடை கோதை
யணி சிந்தினவெலாங், குலாசல மெனத்திகழ் தருந்தோ
ளின் மைந்தர் விடு கொய்யுளைய குதிரையந்தேர்ச்,

சித்தமென வருசெல வொழிக்கு மரி யைக்கரசி செங்கீரை
யாடியருளே, தென்னாடு கதியெய்த முன்னாடு மொருசெ
ல்வி செங்கீரை யாடியருளே. (ரு)

அன்னநடை யிட்டணி வயற்களை கடிந்தொல்கு மஞ்சொலி
ளவஞ்சியனையா, ரரிமதர் நெடுங்கணிழல் விரிபுனல்
விளங்குவன வணிகய லெனக் குருகுதாந்,

துன்னு மலகிற்கவ்வு தொழிலது மனங்கருது தொகுமுழு
தொழிற் கிழமையார், தொலைவிலதி சயமெய்த வது
கண்ட வொண்டொடித் தோகையர்க ணுணமெய்தி,

மன்னு மரவிந்தங் கருங்குவளை மெல்லாம் பன்மலர்க ளிவை விழிக ளடிவாய், மருவுபகை யெனவெண்ணி யெனவேரு டன் போக்கி வளர்விக்க வளர்செநெற்கூழ்,

சென்னிமுகி ரொடவோங்கு மரியைக் குடிக்கரசி செங்கீரை யாடியருளே, தென்னாடு கதியெய்த முன்னாடு மொரு செல்வி செங்கீரை யாடியருளே. (ச)

கடிகமழ் செழுங்கமல மங்கைகால் வதனம்வாய் காட்ட விரல் கெளிறு காட்டக், கணைபுற முழந்தாள் வராலாமை யுடனண்டு காட்டமடி திரைகள்காட்ட,

வடிவுதிகழ் வாளநகிலங் காட்ட வரியின்வளை வண்களங் காட்ட விதழ்தான், வளர்செய்ய துவர்காட்ட மணிமுத்த நகை காட்ட வள்ளைவார் குழைகள் காட்டப்,

படர்கெண்டை விழிகாட்ட மரைமுகையின் மேல்வண்டர் பருமுலைக் கண்கள் காட்டப், பசியகுளிர் குழல்சைவ லங் காட்ட நிறைதடம் பாவையர்த முருவுகாட்டுஞ்,

செடியில்வள மல்கரியை நகரத்து வந்தகொடி செங்கீரை யாடியருளே, தென்னாடு கதியெய்த முன்னாடு மொரு செல்வி செங்கீரை யாடி யருளே. (ரு)

வேறு.

மாலென லாயடி பாதலமுந்தலை வான்முகடுந் தொடலாய், வான்மதி யென்றுடு முற்றும் விழுங்கின வாயுமிழ் கோபுரமுங்,

கோல நிலாமணி கொண்டு குயிற்றிய கொம்மையின் மாம
திலுங், கொண்ட னிறத்தவன் வந்து மகிழ்ந்துறை கொள்
கை குறித்தனனுய்ப்,

பாலினுருச்சுடர் சேடனுவந்து பரிந்துமணிக் கணமாம்,
பைம்முடி மேலெழ மண்டல மிட்டுறு பான்மை கடுக்கு
மெழி,

லாலிலகித்திக ழரியை நகர்த்திரு வாடுகசெங்கீரை, யத்த
மிகுந்துறை நித்தமுகந்தவ ளாடுக செங்கீரை. (சு)

ஒளிர்பொன் விசும்பிடை மலரி னறுந்துக ளுக்கவடங்கிடு
மா, றுறுமது வின்றுளி சொரிய நிவந்துள வுயர் பொழி
லிற் புகுதாக்,

குளிரி னிருங்கதிர் குறைசுடைக்கலை கொண்டொருபா
கநுகர், கோல நறும்பல வின்கனி யின்சரி கூறிதெனக்
கருதா,

ஸிளிர் செமுகக் கடுவன் கையின் வவ்வுதன் வெய்யவனைக்
கைதொடு, மெய்யனு மானெனு மய்யனையுஞ்சிகி வெய்ய
னையும் பொருவு,

மளவில் பெருந்தகை யரியை நகர்த்திரு வாடுக செங்கீரை,
யத்த மிகுந்துறை நித்த முகந்தவ ளாடுக செங்கீரை.(எ)

தண்புனை யின்னமு திட்டு வளர்த்தவர் தாள்பணி மக்களெ
னத், தழுவு கருங்குயி னடியின் வளைந்தன சாலியினக்
குரல்தாம்,

பண்புற நீலித வாடையி னுற்றிய பால்வட முத்தேயப்,
படையி னரிந்தனர் போர் புரி மள்ளர்கள் பகடு நிறைத்
தன நந்,

திண்பட முன்னிவை காரணமா யிடர் செய்தன வொன்றடி
யாற், றேய்ப்பன போல மிதிப்பவை தள்ளிய சென்னெற்
குவைபுரியா,

வண்பொன் மலைக்கிணை செய்யரியைத் திருவாடுகசெங்கீரை,
யத்த மிகுந்துறை நித்த முகந்தவ ளாடுக செங்கீரை. (அ)

தழுவு கருங்குயி னெனுமொரு பந்தரி ருழையினக்கா
ல்க, டகநட் டொளிர்பசு மரகத செந்துகிர் தழைகமுகும்
படுவோ,

டெழுதலை விரிய வரம்பையு மாலையு மிசைய வணிந்து
மிசை, யிகலி யெழும்பரி மாவி னெழிற்றலை யெனமிளி
ருஞ் சாலிக்,

குழுவி னிருந்தரளத் திரளுஞ்சுடர் குலவநிறைத் தொரு
நின், கூர்விழ விற்குயர் மருத மெனப்பகர் கோனணி
செய்தவெனச்,

செழுவள மல்கிய வரியையி னலர்மகள் செங்கோ செங்
கீரை, திருமலை யெனுமொரு மலைவள ரிளமயில் செங்
கோ செங்கீரை. (கூ)

ஆடுவ கேதனம் வனநிகரக் கிள ரஞ்சொ லிளங்கிளியா
ரருகு கலாப மயிற்குலமான வருந்தரள ப்படலை,

யோடருவிக் கிணை யாயிலகப் பல வோளிய சூளிகைதா,
மொளிர் சிகரம் பொரு வக்குல வெற்டென வோங்கிய
பொன் மாட,

நீடு வளந்தகு மானகராகிய நேரிழை விண்ணேகா, நின்று
நலந்தன் முகங்கொடு காண நிமிர்ந்தென வொன்றி யொ
ளிர்,

சேடு பெறுந்தகை யரியை யுகந்தவள் செங்கோ செங்கீரை,
திருமலை யெனு மொரு மலைவள ரிளமயில் செங்கோ செங்
கீரை. (கo)

இரண்டாவது செங்கீரைப் பருவம்

முற்றும்.

மூன்றாவது

தாலப்பருவம்.



ஓராயிரங் கணுடையானு முகாந்த முகிலென் றுளங்கருதி,
யொழுகி வருபாற் றுரையினு லோர்ந்துதெளியப் பரந்த
கருங்,

காரா விளங்கன் றுளிப்பொழியுங் கலசஞ் சுரகங்கையினோ
டக், காணு மயங்கிக் கண்ணுதலுங் காணச் சடையைக்
கடன் மடுத்துப்,

பேரார்மாலு மாலடையப் பெருகப்பெருகி நினைநெடுநாட்,
பிரிவா னேக்க வவாவொ டுனைப் பெற்றாள் வரல்போ லெ
திர்ந்து வரும்,

வாராரரியக் குடியலர்மேன் மங்காய் தாலோ தாலே
லோ, மலர்மே லுறையுஞ் சதுமுகற்கோர் மாதா தா
லோ தாலேலோ. (க)

அன்று தமைத்தீம் புனல் விடுத்தாங் கருளால் வளர்த்த வத
ற்குதவி, யளிப்பானெண்ணி யெனப்பொழினீ ரருந்தா
வருங்கார் முகிலினின,

நன்றுவதிய வாசனமாய் நபமேலோங்கிப் பொழியுமது,
நனிசேர்தலி னப்பெயர்கொணதி நங்கைகனக மணி
யாரந்,

துன்றுதன மேலணிந்து மிடைத் துடியாய்ச் சிலம்பார்கா
லொடும்போய்த், தூயகுழை பூண் டுததி யெனுந் துணைவ
னுக மிகு மகிழ்வின்,

மன்றமணக்கு மரியை யலர் மங்காய் தாலோ தாலேலோ,
மலர்மே லுறையுஞ் சதுமுகற்கோர் மாதா தாலோ தாலே
லோ. (உ)

தன்பாற் றணந்து திருநெடுமா றலமான் றிருமானொடு மரு
வித், தயங்கும் படிகாணூஉ க்கலச சலதி தனிமைபொரு
தவன்றன்,

னன்பா லடைவ னெனல்போல நகவந் திலங்கு கோனேரி,
நாளும்படி வார் பவக் கடற்கோர் நாவா யெனலாய்ப் பரம்
புருட,

னின்பாற் கலப்பான் முத்தியெனு மெழினுடு தவறனைக்கே ளா, விமையோர் நதியே முத லெவையு மெவர்க் கீதாங் கொலென வேங்கும்,

வன்பார் தொழுசீ ரரியை யலர் மங்காய் தாலோ தாலேலோ, மலர்மே லுறையுஞ் சதுமுகற் கோர் மாதா தாலோ தாலேலோ. (ங)

என்றேங் காழி யிறையவன்கை யேந்துந்தவள வலம்புரி போ, லெழில்சேர் கமல மலர்கடொறு மெகினத்தினஞ் சேர் தடக்கரையி,

னன்றேங்கிய கற்பகங்கள்சுர நதியின் புனற்கு மிப்புனற்கு, நவைதீர் தரத்தை யறிந்திடுவா னற்காய்க் கலசக் காவடி கண்,

மென்றோ டாங்கிச்செல விமையோர் மேம்பா டழியுமெனக் கலங்கி, விரைவின் மறைத்த கரும்படம்போன் மேகக் குழாந்தம் மேற்படிய,

மன்றேங் கரியக் குடியலர்மேன் மங்காய் தாலோ தாலேலோ, மலர்மே லுறையுஞ் சதுமுகற்கோர் மாதா தாலோ தாலேலோ. (ச)

பண்டுதனை வேரொடும் பிடுங்கிப் பாரங் கெடுத்தான் றலைக ளொரு, பத்துங் கணையாற் றரைவிழுத்தும் பரமனடியா ரதமக்கிடமாய்க்,

கண்டுவடிவம் பலவெடுத்த கைலையெனலாய்ச் சோமனைத் தங், கண்டாங்கினவாய் விஞ்சையர்தாங் கணங்கொண் டுறைவெண் சுதைமாடங்,

கொண்ட துவசத் துகிலசைவாற் கூவியகை தனைநேராக், கொள்கை குறித்துப் பரிபவஞ்செய் குறியே காட்ட பற் பல்வள,

மண்டுமரியக் குடியலர்மேன் மங்காய் தாலோ தாலேலோ, மலர்மே லுறையுஞ் சதுமுகற்கோர் மாதா தாலோ தாலேலோ. (ரு)

திருப்பாற்கடல் வந் தெனத் திகழுஞ் சீரார் தடத்தாங் குட னடைந்த, சேடன் முடியின் மணிகொ லெனத் திகழுங் கமல மலர்மேவி,

விருப்பா லளிக ணீவிர்பெறும் விரைமென் குழலாள் மாலொ டிவண், விழையா வுறையு மெனத்தூதர் விளம்பு மொழியி னிசை பயிலத்,

தருக்கா லிவ்வா னந்தவுரை தந்தவதற்கோ ரரும்பரிசி, றரு மாறெனத் தீந்துளியமதுத் தாரையொழுக்க வனுதினமு,

மருப்பா யரியக் குடியலர்மேன் மங்காய்தாலோ தாலே லோ, மலர்மேலுறையுஞ் சதுமுகற்கோர் மாதாதாலோ தாலேலோ. (சு)

வேறு.

வெங்கொலை வாள்வ லரக்கர் புரிந்தன மிக்கன வெம்பவ மும், விண்ணவர் நல்வினை யும்பிடர் வவ்வின வேகமொ டுந்துதலாற்,

செங்கயல் போலும் விழிக்கை கயன் மகள் செப்பிய வாய் மொழியாற், றெயரத ஞருயிர் சென்றதெனப் படர் தேவ பிரா னுடனே,

மங்கு லுடன்செலு மின்னெனவுங் கட வாரணமோடு செலு
ம், வண்பிடி யென்னவு மானொடு செல்பிணை மானவு முன்
றொடருஞ்,

சங்கை யிலாவள மல்கரியைத் திரு தாலோ தாலேலோ, சங்
கரனுக்கொர் பிதாமகி யானவ டாலோ தாலேலோ. (எ)

புட்கர மேவிய தன்கணவற்கொரு பூசுரன்மெய்ம் மொழியா
ற். பூவுலகிற் றொழு மாலைய மற்றது புந்தியினிற் கருதா,

வெட்கமுறு வுலகிற்க ணவற்குறு மேலிழி வரிவையர்தம்,
மேல தெனும் பரிசுன்னி னனித்தல மேன்மை யுணர்ந்
தனளாய்,

நட்புட னப்பழி தப்புற வாணி நயத்தவ மாரழலி, னுப்பணு
ருப்பல கொண் டுலகத்திடை நண்ணினள் போற்பணிலந்,

தட்கமலந் தொறும் வைகரியைத்திரு தாலோ தாலேலோ,
சங்கரனுக் கொர் பிதாமகி யானவ டாலோ தாலேலோ.
(அ)

கார்முக மின்ன லுடன் கலவா வரு காரொனவுந் தவமோர்,
கலவுருவங் கொடு சென் றெனவுஞ் செல் கருஞ்சுடர்
ஞாயிறொடு,

மேர்முகமா நகரத்துள யாவு மிடர்க்கடல் மூழ்கிடவு, மெவ்
விடரும் பிரமானுபவர்க்கில வென்றுலக த்தெவரு,

நேர்முக மாவுண ரத்தொட ராவதி நேயமிகுங் களியுண், ணி
றைதர வாயில் கடக்குமு னவ்வன நெடிது கொ லென்ற
வடன்,

டார்முக மல்கிய குழலரியைத் திருதாலோ தாலேலோ, சங்
கரனுக் கொர் பிதாமகி யானவ டாலோ தாலேலோ. (கூ)

வேங்கடமா லெவருக்கு மொர் நாயக விண்டுமுதன்மனையா,
மெல்லிய லாயவன் மார்பிடை வாச விருப்பின் மிகுந்
தொழிலா,

யாங்கவனுக்கதி கமைவள ரப்புக லஞ்சொ லிளங் கிளியே,
யம்புய மாமலரா லழகெய்திய வங்கர மென்றளிராய்,

பாங்குறு பங்கய வாதன மேவிய பைந்தொடி செங் கொடி
யே, பரிவு முதற்பல குணவகை யான்மிகு பாவைபுவிக்
கனையே,

தாங்கு வளம்பல மல்கரியைத் திரு தாலோ தாலேலோ,
சங்கரனுக்கொர் பிதாமகி யானவ டாலோ தாலேலோ(ன)

மூன்றாவது தாலப்பருவமுற்றும்.

நான்காவது

சப்பாணிப்பருவம்.

கமநெடுஞ் சூலக் கருங்கொண்டலின் குழாங் கடன்முகந்
தெழுவ தென்னக், கனமும் மதஞ்சோர வருகச புரந்
தரன் கரிணிகளுடன் புனல்படீ இச்,

சமையவற் புட னுடல்புரி போதுவெங் கரவுதாள்பற்ற வவ்வி
னந்தாந், தற்போத மெய்துகாற் பாசங்க ளென நீங்கு சம
யத்தொர் புகல் பெறும,

லமையக்க சிந்தோல மிட்டுமூலப் பொருட் கபயமென வர
ஞதியோ, ரலன்யானலன்யா னெனக் கைவிடவதி விரை
வினருள்வெழு மருள்வாரியைத்,

தமனியச் சுட ராடை தொட் டீர்த்த செங்கைகொடு சப்
பாணி கொட்டியருளே, சலநிதி யெழுந்தரியை வளநக
ரமர்ந்ததிரு சப்பாணி கொட்டியருளே. (க)

சீரகத்தெழு கமலமலரொடு பரஞ்சோதி திருமார்பு குடிதுற
ந்து, தேசங்களுக்கெலா மதி தேசு பெற்றதுகொல் சென
கேச னகர மென்னப்,

பாரகத் தலமுகத் தொரு கோடி பரிதியொளி பாறக் கிளர்
ந்து வளர்நாட், பையரா வணை விட் டயோத்தியிற் றயரதப்
பார்த்திபபிரான் மகனெனக்,

காரகத்தெழு தாடகா தாடகேயரைக் கட்டுமுனி வேள்வி
காத்துக், கல்வடி வொழித் தகலிகைக் கரனிருஞ்சிலை
கரங்கொடு முறித்துநின்ற,

தாரகப் பிரமத்தி னங்கைபற் றங்கைகொடு சப்பாணிகொட்
டி யருளே, சலநிதி யெழுந்தரியை வளநக ரமர்ந்ததிரு சப்
பாணி கொட்டி யருளே. (உ)

முன்னொரு தினத்தி னுயர் தன்னிடை மிடைந்தவள முற்று
மலை யிட்டுழக்கி, முறையிற் கவர்ந்து வறுமைப்பட வினுஞ்
செய்ய முயல்கிலா தவனடி விழாத்,

துன்னிய திரைக்கர மெடுத்திரங்கிச் செய்ய துணையடிக் கமல
ம் வருடித், துய்யதாமிசை யெனச் சூழ்தரும் பாலின்வளர்
தொல்லை யம்புதியி னுப்பண்,

பன்னகாதிபன் மடியினிற் கண்வளரும் பரம பாவனன தருகுகாரின், படலத் தெழுந்து சலியா தொளிசெய்மின னெனும்படி யகல்கிலாதுவைகித்,

தன்னனைய பாதவனசந் தைவரு செங்கைகொடு சப்பாணி கொட்டியருளே, சலநிதி யெழுந்தரியை வளநக ரமர்ந்த திரு சப்பாணி கொட்டியருளே. (ந)

மூவெழு முறைப்புவியின் மன்னவரை வேரற முருக்கிய மழுப் படையினன், முனிவின னளித்தசிலை யோடுதவ மோடு வல முழுதும் வலியின் முன்வாங்குந்,

தேவனனை தந்தையுரை சொற்றுங்கி நின்பின் சிறந்தவிளைய வன் வரப்போய்த், தீயதொரு கானத்து வைகுநாட்சீறிச் சினந் தடர் கராதியர்களாம்,

பாவியர்கடற்படையின் வந்துபொர வங்கைப்பரித்த சிலையின் முகூர்த்தம், படுமுன் படச்செய்த பரிசுன்னி யவனுடற் படுகணையினுய செம்புண்,

டாபமற முலைவேது கொண்டொற்றி யணைகைகொடு சப்பாணி கொட்டி யருளே, சலநிதி யெழுந்தரியை வளநக ரமர்ந்ததிரு சப்பாணி கொட்டியருளே. (ச)

முன்னமொரு கானீவி ருமதுபர முற்றுமெனை முன்னிட்டொர் முதல்வர்க்கிடு, முறையின்முற் பவராசியிற் கொண்டுணுவரும் முதலொழிய முழுதுமயர்வாற்,

பின்னுளவு நாடலா மேலினியோர்பிழை வராப் பெற்றுறை மின்வரினு மற்பப், பேதுறலை யிட்டொழியு மஞ்சலீ ரென்பதிற் பீடுபெற் றுளிர பயமு,

மின்னிலையி னின்றெம தடிக்கென்று மெத்தொண்டு மினிதி
யற்றிய பினொருவா, திவ்வடி யடைந்துய்வி ரென்றுரைக்
குந் தகையி னிலகு வரதமு மிசைந்த,

தன்னிகர்செழுந் தாமரைத்துணைச் செங்கைகொடு சப்பாணி
கொட்டியருளே, சலநிதி யெழுந்தரியை வளநகரமர்ந்த
திரு சப்பாணி கொட்டியருளே. (ரு)

வேறு.

சாது சனங்களை நாளு நலிந்தெழு தாழ்வுடை ராவணன்
வெந், தானையுடன்பட வவனிடு வெஞ்சிறை தனின்முனம்
வைகியநாள்,

வேதமினுந்தெரி யாதலைதாரக மெய்ப்பொருளா மவனால்,
விடவருதூத னெனுஞ்சுடர்வெய்ய விரோசனனிற்கலைநூ,

லோதனுமானுதவுங் கதிர் மாமணி யொன்றிய வங் குலி
கொண், டோரரு நின்னொரு பொற்கலை மேவி யொளிக்கு
மொளிக் குழுவின்,

கோதறுமாமணி தந்த கரங்கொடு கொட்டுக சப்பாணி,குல
வரியக்குடி வளர்கனகக்கொடி கொட்டுகசப்பாணி. (சு)

கண்டுபடுங்குத லைச்சொன வின்றெழு கன்னியராயமுடன்,
கனகமுடிச்சன கேசன்மனைக்கணொர் கந்துகமாடியநாள்,

புண்டரிகக்கை பிழைத்தது வானதி பொங்கு சடைப் பெரு
மான், பொருசிலை நின்மனை யுள்ளதடிப் புகு போது
செகத் குருவாம்,

விண்டு வலாதவர் மேவி யெடுக்கரு வெய்ய வலத்ததனை,
வேகமொ டங்கவன் மார்பணியக் கொளும் விரைகமழ்
தாரிதெனக்,
கொண்டு மறித்தெறி தந்த கரங்கொடு கொட்டுக சப்பாணி,
குலவரியக்குடி வளர்கனகக்கொடி கொட்டுகசப்பாணி. ()

கன்னவிலும் புய ராவணனாகிய காதக னின்முனுருக், கன்
னக டோரம தாகிய வெம்மொழி கழறிய காலையிலே,
நின்னது செல்வமும் வெற்றியு முற்றவு நீடுமென் முல்லை
யெனு,நிகழு மனன்முனு மென்கண வன்முனு நீறுறு மீதி
னெனப்,
பன்னி யெனக்குலை குலைவொடு மிப்பழி பாவி முகத் துறி
னும், பாவ மெனக்கரு தாவதன் முன்சில பகரவொர் திர
ணமெடாக்,
கொன்னவி லங்கவன் முன்னிடு கைக்கொடு கொட்டுக சப்
பாணி, குலவரியக்குடி வளர் கனகக்கொடி கொட்டுக
சப்பாணி. (அ)

புடை வளருந்தரு வைந்துடையானோர் புரந்தரன் முன்
னொருகாற், பொங்கு சினத்தின னந்தண னானன மொழி
பொய்யறு வெவ்வுரையா,
லடையவு நந்தின நவநிதி யாயின வலைகடலிற் புகவே, யஞ்சி
யனந்தரம் விஞ்சு நிரப்பி லழுந்தி மயங்கினனுய்,
நடைபெறவங்கு தனக்கருளத்தனி நண்ணியநின்னடியா,
நளினம்வணங்க வுவந்தபயத்தொடு நல்வரதங்களெனுங்,

கொடையருளுங்கர தாமரசங்கொடு கொட்டுக சப்பாணி,
குலவரியக்குடி வளர்கனகக்கொடி கொட்டுக சப்பாணி.

தாரணியிற்பல தன்மம்வளர்ந்து தழைத்திடமாதவனுந், தா
னொருகண்ண னெனப்படிகொண்டு தயங்கியகாலையினீ,

சீரி னுருக்குமணிப் பெயரோடு சிறந்தொரு வந்தணனுற்,
செய்ய மணந்தெரி வித்தவன் விரைவொடு சென் றரசக்
குழுவின்,

பேரணியிற் சுடரும் பரிசுற் றுணர் பெற்றிய யாயிலகிப், பெ
ருமன் வழங்குமு னம்புயவங்கை பிடித் தெவரும் புக
ழக்,

கூரணிதேரிடை வாவிய கைக்கொடு கொட்டுக சப்பாணி
குலவரியக்குடி வளர்கனகக்கொடி கொட்டுக சப்பாணி.()

நான்காவது சப்பாணிப்பருவம் முற்றும்.

ஐந்தாவது.

முத்தப்பருவம்.

ஓரஞ்சலிகின் பாற்புரியி னேங்கும் பிரமாதியர் பதமு, முப
ரக்கரமென் றுயர்ந்தவரா லுரைக்கும்பதமு மேலில்லாப்,

பேரம்பரம பதவீடும் பேரன்புட னீந்தென் னளிக்கப், பெற்
றேமென்றே நாணமுறப் பெறுஞ்சீருதார குணமுடை
யாய்,

பார்மல்கவையா முளங்கருதேம் பரிவாலொரு முத்தந்தரி
னீ, பகருமவை முற்றும்பெற்ற பரிசேகண்டா யாதலி
னின்,

மூரன்முறுவற் செங்கனிவாய் முத்தந்தருக முத்தமே, முறை
யாரரியைத் திருவெவர்க்கு மூத்தாய்முத்தந் தருகவே. ()

எந்தவுலகங் களுக்கு மொரு விறையாம் வேங்க டாதிபற்
கோ, ரிறையாந் தேவி யிடர்க்கடலி னிடைவார்ப் புரக்கும்
விரதத்த,

சிந்துமமுத மழைபொழிவ செந்தாமரைக்குப் பாங்கினவா
ஞ், செழுஞ்சீர்க்கடையா லுனதிருகண் சென்றெத்தலத்
தே யாடுவகா,

ணந்தவிடம் பார்த்தக மகமென் றரும்பேர்நிதிய மனைத்து
மன்றே, யடையாநிற்ப வெனினருளா லளிக்கப் பெறி
னோர் முத்தெனக்கு,

முந்தை யவற்றுற் குறை யுளகொன் முத்தந் தருக முத்தமே,
முறையா ரரியைத் திருவெவர்க்கு மூத்தாய் முத்தந்
தருகவே. (உ)

பிறப்போ விறப்போ பேருலகிற் பிரமன்முதலார் பெரும்
பதமோ, பேராநிலையி னித்தியராற் பேணுங் கலங்காத்
திருநகரோ,

வறத்தான் மறத்தா னெவ்வுயிர்க்கு மளிப்பானுளனாயினுந்
திருமா, லருளின் வடிவுன் முகநோக்கி யாங்கிங்கிதத்தின்
பரவசனாய்,

நிறத்தோ டெவுந் தகையனவ னிலையா தலினீ தொருமுத்த,
நீதா னளிக்கின ருட்கடலி னிலைகாண் கில மூழ் குவ
நிலையே,
முறிப்போலிலகு கவினுடையாய் முத்தந்தருக முத்தமே,
முறையா ரரியைத் திரு வெவர்க்கு மூத்தாய் முத்தந்
தருகவே. (ரு)

மித்தைக் கிடமோ வெவ்வுயிர்க்கும் விளக்க மளிக்கும் பிரா
ன்மரும, மேவிச் சுடரும் வடிவொளியான் மிகவுந் துலக்
குந் தேசுருவாய்,
நித்தத்தகைய பரம்பதமு நினையான் மானுபவ வுலகு, நியம
த்தயனுர் பதமுதலா நீடந்தரத்தார் தமநிலையு,
மொத்திட் டளத்தற் கருமகிமை யுடையாய் சுபத்திற் கோர்
சுபமே, யுனகட்கடையின் பார்வை யொன்றே யுதவுமெனி
னீ யருளுதவு,
முத்தச் செய்கை மொழிபவர்யார் முத்தந்தருக முத்தமே,
முறையா ரரியைத் திருவெவர்க்கு மூத்தாய் முத்தந்
தருகவே. (சு)

அருகேவைகிச் சேதனர்தீங் கடையத்துலங்கா வகையின்
சொ, லமுதின்மயக்கி வித்தகனு மவன்சீருளப்பா லுஞ்
சிறிது,
மருவா தொழிய வெணியென்ன மருமத் திருந்தென் றெ
ன்று மருண், மல்கப்புரியுந் தாயுமையே மருவநுமது சர
ணமெனு,

மிருதாமரைக்கு ச்சரண்புகுவார்க் கெளிதேவிசும்போ டள
கைதுத்தத், தெறிசீர்க் கடலி னிதியமூற்று மினிதி னடை
யா நின்றனவான்,

முருகார்முத்தி னெவையெய்தா முத்தந்தருக முத்தமே,
முறையா ரரியைத் திரு வெவர்க்கு மூத்தாய் முத்தந்
தருகவே. (௫)

வேறு.

தண்டுறை தோறலை வாரிதிவால்வளை சந்ததம் வந்தெதிருந்
தணிவில்புனற் பொருனைப்படு சங்கமசாகர முத்தமுடற்,

கொண்டணியிற்பெரு வணியலதீயல கோகனகத் திருவாய்,
குலவொரு முத்தரு ளப்பெறி னித்திகழ் குவலயநற்
றிருவும்,

பண்டை மறைக்குல முடியவுரைப்பரு பரம பதத்திருவும்,
பாவைய ரிப்பிரி யாயவர் கைப்படு பான்மையவே யல
கொன்,

முண்டக மாமனை யாய்முனி யேலொரு முத்த மளித்தருளே
முறுவன் முகத்தனை யரியை மலர்க்கொடி மூத்த மளித்
தருளே. (௬)

தந்தி வராக மருப்புட னிப்பிசலஞ்சல முத்தமெலாந், தரவ
ரினுங்கனி வாய்மலர் நின்றிழி தருமமுதத் தொடெழா,

வந்ததொர் முத்தென வுடலொ டுயிர்க்கித வகையருளா
வதலான், மகிதல மேலுடல் வெம்மையு மாறு வணம்
புரி யாதனுவாந்,

தொந்த வினைப்படர் பிறவி யெனப்பெறு சோப மருங் கனல் வாய்த், துய்யென லாயழி யச்செயி னோர்துணை சொலவி சையா மகிமை,

முந்தையி னுயலர் மேலுறை மங்கையொர் முத்த மளித்தரு ளே, முறுவன் முகத்தனை யரியை மலர்க்கொடி முத்த மளித்தருளே. (எ)

அயனைமுதற்சிறு தம்பவரைப்படு மரியவினைச்சனனத், ததி நிவகக்கொ ரெலைக்குறியாமுன தருளையடுத்தவரே,

நயகுசலக்குழு முழுதுமடித்தெழு நரகவழித்துணையா, நவை யைவிடுத்திசை துரிதவகைத்திற னணுக லறத்துறவா,

மயலெ வெவர்க்கு முண் மிகவும் விளைத்துடன் மருவுமவித் தையையும், வரைவருவப்புட னிஃதருளிற்சொலு மகிமை யெமக்கெளிதே,

முயலின்மதித்திரு முகமினிடைத்திரு முத்தமளித்தருளே, முறுவன் முகத்தனை யரியைமலர்க்கொடி முத்தமளித் தருளே. (அ)

மறையின் முடிக்கொரு திலதமெனச்சொலுன் மகிழ்நனை நற்பரமாய், மகியினிடைச்சிலர் பகர்வருனைப்பலர் மதியி ன்மதித் தறைவார்,

தறையின்மிசைக்கிளர் வொடுமெதலத்திழி தகையர்தமக்கை விட, றகுமெமையத்தகை வுளநினையற்க தணத்தலொழித் தெவணு,

முறையுநுமக்கடி மையினமெமக்கிரு வுமையொழியக்கடவு, ளுளவிலைமெய்த்திற னிதெனமனக்கொடு முவமைசொல ற்கரியாய்,

முறிகனகச்சிலை புரையுநுதற்றிரு முத்தமளித்தருளே, முறு வன்முகத்தனை யரியைமலர்க்கொடி முத்தமளித்தருளே.

தனமுதவுஞ்சுதர் தமையுதவுங்கன தனமடவாருதவுந், தரை யுதவும்பொரு புரையுதவுஞ்சுர தருவுலகுந்தருமொண்,

வனசனருந்திரு நகரொடுதொன்றுகை வலியமு நல்கிடுமிவ், வகையவெலாநர கெனவொளியான்மிக வருசுகவாரிதி யாற்,

கனகவினனிறை பரமமெனும்பர கதியுதவுந்தகையாற், கனவி லும் வந்ததொர் நனவிலும்யாமிவை கருதலமிங்கிதையே,

முனின மணங்கர சிஃதமை யுந்திரு முத்த மளித்தருளே, முறுவன்முகத்தனை யரியைமலர்க்கொடிமுத்தமளித்தருளே.

ஐந்தாவது முத்தப்பருவ முற்றும்.

ஆறுவது
வருகைப்பருவம்.

மக்கள்வேண்டிற் றினிதுதவு மாதாவெனலாய்ப் பரமபத, வாழ்வுவேண்டி னன்மவனு பவமேவேண்டின் மாமல ரோன்,

றக்கவுலகந் தான்வேண்டின் சயிலக் கயிலை பெறவேண்டின், றண்கற்பகத்தி னிழல்வேண்டின் றரையோர் குடையி னிழலாளு,

மிக்கபதமே பெறவேண்டின் வேலைப்புவியின் மானிடர்க்கு, விருப்பி னளிக்கும பாங்கமுடை விமலா யரியை யலர்மங் காய்,

கக்கும் பனிவெண் மதிமுகத்தாய் கமலாய் வருக வருகவே, கல்லார்மனப் பாறையின் விளையாக் கரும்பே வருக வருகவே. (க)

ஈசனவற்போ லத்தனுக்கே யியல்பாங் கடுஞ்சொற் சினமணு கா, தெழுதாய்க் குரித்தா மின்புடைமை யினியமொழி யே மிகவுமிகுந்,

தாசுபுரிந்தா ரென்னினுமென் னவர்செய்தீமை யெனத்த ழுவி, யவன்பான்மொழியின ஞதரவான கற்றுவுரையின் வல்லபமு,

மூசியிவைகொண் டுனையடைய முயல்வார்தமையாங் கவன டியின், முன்னர்விடுத்தே யொருசிறிது முனியாதணைக்க வினிதிணக்குங்,

காசில்புருட காரவியற் கமலாயரியைத் திருவருக, கல்லார் மனப் பாறையின்விளையாக் கரும்பேவருக வருகவே. (உ)

பொற்றாணுரமுங் கனகனுர ப்பொருப்புமனி நாணியைச் சினவும், பொங்குதழற்கண் ணுதலுடைச்சிம் புள்ளும்பிள வோரிரண்டின்விழ,

முற்றமுனியு முடங்குளைய முரட்போர்ச்சீய முன்னணுக, முதிரக்கலங்கு மறையவனே முதலாமமரர் வெருஉக்கா ணுப்,

பற்றியெழுகோ பானலம்போய்ப் பாறவிண்டு பதத்தணு கிப், பாங்காங் கருணைக் கண்ணம்பும் பகர்வி னுதலு மிடை மினுமாய்க்,

கற்றூர்பரவின் சொன்மழைபெய் காரேயரியைத் திருவருக, கல்லார் மனப் பாறையின் விளையாக் கரும்பே வருக வருகவே. (௩)

உலகமுழுதோர் கோனடவு மொருவன்றனக்கு மவனருளை, யுறுகைக்குழலுஞ் சேதனர்க்கு மொன்றக்கடக வடிவானுய்,

நலவிந்தனமின் றேலனல்போ னண்ணுதுனையாங் கவனிலகான், ஞாலத்தொளியாற் கதிரவன்போ னண்ணியுனையே நகுகின்றுன்,

பலருமறிவ ரிஃதெனினும் படியின்மடவார் பதிகளிடைப், படிவான்காட்டும் பரிசெனவே பற்றிப்பணியுந் தகையுடையாய்,

கலியென்பதுதான் கண்டரியாக் கவின்சேரரியைத் திருவருக, கல்லார்மனப் பாறையின்விளையாக் கரும்பேவருக வருகவே. (௪)

தாயேனினது தனிக்கணவன் றரையிற் கொடிய தொழில் புரியுஞ், சனர்பாலிதமே புரியவெணித் தனையர்தமைத் தந்தையர்போல,

வாயாவொருகாற் சினமுளத்தே மருவியெழுகா லிடைய
ணுகி, மதியீதெவன்கொ றீமையிலார் மண்மீதெவரே யுள
ரென்ன,

வாயாவுசித வுபாயவுரை யதனுன்மாற்றி யவற்குநித. மனு
கூலர்களாம் வகைபுரியு மமுதமொழியின் வருடத்தாய்,

காயாவருளின் வடிவான கமலாயரியைத் திருவருக, கல்லா
ர்மனப் பாறையின்விளையாக் கரும்பேவருக வருகவே. ()

எல்லாமுனைவந் தடிவணங்கு மிறைவியொரு தானுய்த் தனை
யர்க், கிடர்வந் தணுகி லாங்கவர்க்கொண் டிறைபா லணுகு
மன்னையெனப்,

பல்லா மவைபின் வரப்பெருமான் பதமே பணியா நவிலுகிற்
பாய், பகர்தற் கரிய பலபொருளுன் பாலே படிய வவை
படிவாய்,

பொல்லா வினையா லவன்வெறுக்கும் பொய்யோ மெமையும
வன்பொறுக்கப், புரிவாயெனுஞ் சேதனர்க்காட்டிப் புரி
வின்மொழியாற் காக்குவிப்பாய்,

கல்லாதவருங் கற்றவருங் கருதுமரியைத் திருவருக, கரு
மான்மகிழு மொருமானின் கன்றேவருக வருகவே. (சு)

வண்டுமதுவுண் டுழறுளப வனத்தேயுலவு பொற்கிளியே,
வனச மலரின் மிசையெழுந்து வண்ட ருகவா மதுப்
பெருக்கே,

குண்டுபடும்பா லாழிவருங் குளிர்செம்பவளக் கொழுங்கொ
டியே, கொண்டலுருவன் புயவரையிற் குலாவுங்கலாப
மயிற்பேடே,

பண்டைமனுவின் வழியரசர் பாங்காமனைக்கோர் மணிவிள
க்கே, பகரு சனகர் குலோததியிற் பரிமித் தெழுமோர்
கற்பகமே,

கண்டமறைச் சாகையின்முதிருங் கனியேயரியைத் திருவரு
க,கருமான்மகிழு மொருமானின் கன்றேவருக வருகவே.

சடையின் முடியு மரவுரியுந் தனுவும்பூவைப் பூவைநிகர்,
தனுவுமுனிவர் புன்கணையுங் கணையுமேந்திக் கருமுகில்
போற்,

படரும்வனத்தே படருமெங்கள் பரஞ்சோதியின்பின் மின
ன்மினல்போற், பழியிலிளையோ னுனைத்தொடரப் பரிவிற்
றொடர்ந்தா யெனப்பகர்வார்,

குடிலைப்பொருளு மித்தகையே கொண்மினெனவிப் பூதலத்
தோர், குறித்துமகிழக் காட்டுகிற்குங் கொள்கையென
வே குறிக்கின்றுங்,

கடையின்மறைதே டரியமொழிக் கரும்பேபரியைத் திரு
வருக, கருமான் மகிழு மொருமானின் கன்றே வருக
வருகவே. (அ)

வேறு.

சனகர்பெரும னனகயாக தலமெழுந்த முதல்வியே
தாரகேச னிகரும்வதனி தாரகேசனடிதொடக்,

கனககமலவங்கைபற்று கன்னிவிமலை கமலையே,
காசிலாத தயரதற்கோர் கவின்மிகுந்த மருகியாய்,

வனநடந்து பிரிகலாத வண்ணமிங்குகாட்டினுய்,
மாசின்முனிவ னங்கைபூட்டு மணிபொனுடை சூடினுய்,

யனைவர்பாவ மிரியுமரியை யலரின்மங்கை வருகவே,
யகரவுருவனைத்துலக்கு மன்னைவருகவருகவே. (௯)

கஞ்சவஞ்ச நூபுரங்கள் கால்சி லம்பவருகவே
கலைசுமந்த கொடிமருங்கல் காணவன்னை வருகவே

விஞ்சுமங்க லங்கழுத்தின் மீதிலாட வருகவே
விளைநிலாவின் வாய்மலர்க்கண் வெணகையாட வருகவே

பிஞ்சின்மதியின் முத்தின்வேர்பிதுங்கநுதலின்வருகவே
பெய்முகிற்சுருண் முகம்பிறங்கிவீழவருகவே

யஞ்சிவந்தடைந்த வெம்மையருள வேண்டிவருகவே
யகரவுருவனைத்துலக்கு மன்னைவருகவருகவே. (௧௦)

ஆறுவது வருகைப்பருவம் முற்றும்.

ஏழாவது.

அம்புலிப்பருவம்.

கமலத்தி னிடைவந் தெழுந்துலகெலா முதவுகாரணன் முதற்றேவருங், கருதற்கு முடியாத பிரமத்தி னிலைமையுணர் கடவுண்முனிவரர் குழாமுஞ்,

சமயக் கடைக்கணருள் பெற்றிலா ரினுமம்ம சரதமிது தானெனற்குத், தனிமைப் பரஞ்சோதி யுலகெய்திலாத வித்தகைமை யதுவே கரியதாம்,

விமலர்க்கு நிதியாகு மெமதம்மை வாவென விரும்பி நிற்கூ
வுகின்றாள், விரைவுட னெழுந்தி வட னுட னுடவெண்ணி
னின் மிக்கபாவனர்க ளிலரா,

மமையக்கை வசமதாய் விடுமிரு விபூதியிங் கம்புலீ யாடவா
வே, யரியைநகர் குடிகொண்டவலர்மீது மங்கையுட னம்
புலீ யாடவாவே. (க)

சீதவன மாலைபுனை மாலிதய மகிழவரு செய்யதகை பெற்
றிடுதலாற், சிறந்தனப மோடுமிசை யாசையுற வாழலாற்
றேறிய களங்க முறலான்,

மாதகைய வத்ரியம் பகபிதா மகனுக மருவலாற் கட லெழு
தலால், வண்கலைக ளெட்டெட் டுடன்வளர்தலா லெவையு
மண்மிசை வளர்த்துவரலா,

னீதமுறு செங்கமல மிசைபட விளங்கலா னிலவினைவிடுத்
துதவலா, னீடுகண் மரையோடு பகைகொண் டிருத்தலா
னீ யிவளொ டொத்துலவுவா,

யாதலா லண்டபகி ரண்டமாதா விவளோடம்புலீ யாடவா
வே, யரியைநகர் குடிகொண்ட வலர்மீது மங்கையுட னம்
புலீயாடவாவே. (உ)

சிந்துந் திரைப்புணரி யிற்றனுடன் வந்ததொரு செய்கையை
மனக்குறித்தோ, தேவர்க்கெலா மன்னையாகலிற் சேயெ
னச் சிந்தித்ததோ தனிறையுள்,

வந்ததென வுன்னியோ வயனார் படைப்பினின் மகன்மக
னெனக்கொண்டதோ, மகன்மகன் சென்னியில் வாழ்தி
யென் றெண்ணியோ வாவெனக் கூவுகின்றாள்,

சந்ததமு மன்பர்மறு வெல்லாந் துடைத்துதவு தாயருட் கிட
மதானுய், தவமே திழைத்தனைகொல் குருபாத கத்தினெ
டு தருமாசு மொழிவுசெய்யு,

மந்தரம தின்றுகாண் வந்துள துனக்கம்ம வம்புலீ யாடவா
வே, யரியைநகர் குடிகொண்ட வலர்மீது மங்கையுட னம்
புலீ யாடவாவே. (௩)

மருமலர் மிசைத்தோன்று பிரமாதி கட்குமிடர் வருபொ
ழுதி னபயவரத, மலரா லளிக்குமா றன்றியொரு புகன்
மொழியும் வாய்மலர்கிலாள் கூவுமாற்,

பெருகியமு தொழுகுமுன துடன்முழுதும் வெளிறிமிகு பெ
ருமித மிழந்துவற்றிப், பிரியாத மறுவினெடு மொழுகு
கண் பனிசோர்வு பெற்றுமதி கூழமுதுசெய்,

தொருகலையு மில்லா திவ்வுலகெலா மலைகின்ற துறுசெயலை
யுன்னியென்னம், முடனுதித்தவனிந்த வுறுகணடை வா
னிதற் கொப்பதோர் பழிப்பெவர்க்கு,

மருளுதவு நந்தமக் கிலையென் றழைப்பதே யம்புலீ யாடவா
வே, யரியைநகர் குடிகொண்ட வலர்மீது மங்கையுட னம்
புலீ யாடவாவே. (௪)

மழுவுற்ற கையிற் செபத்தாவடங் கொண்டு மதிலிலங்கை
யர் பிரானை, வாட்டிய திறற்றூரகப் பிரம சிந்தனை மகான்
சடில மகுடமீது,

பழுதற விருக்கின்ற பரிசுதனை யுன்னியோ பலகா லழைத்
திடவுநீ, படர்கிலா யப்பெருமை யெவணுற்ற வெனி
னெம் பரம்புருட னிதயகமலத்,

தெழலுற்ற தன்றியன் றெம்பிராட்டியினொடு மினியபா லுத
திவந்த, வியல்பென வறிந்திலா யிஃதென்ன கெடுமதி
கொ லெய்திற்றுனக் கின்றுகா,

ணழிவிலா வாயுளுஞ் செல்வமு மெய்தலா மம்புலீ யாடவா
வே, யரியைநகர் குடிகொண்ட வலர்மீது மங்கையுட னம்
புலீ யாடவாவே. (௫)

வருவபக்கங்க ளொரிரண்டினும் வளர்ந்துகுறைவா யிவணி
தம் வளர்குவாண், மறுவுடற் படவாழ்தி நீயிவட னடிய
வரு மறுவிலாரக் களங்க,

மெரியரவின் வாய்ப்பட்டுமெலிதிநீ யீசனொடு மிவளிடங்
கொடு மகிழுமா, லிங்குசேடப் பொருளிலொன்று நீயிவ
ளெவ்வுயிர்க்கு மொருசேடிகண்டா,

யொருகலையு மின்றியோடித் திரிதிநீ யிவளுமொளிர் நாய
கத் தரசிகா, ணொருவாது நாளுங் கொலைத்தொழி லியற்
றுபவ னுடனுறைதி யிவள் சாதுவா,

மரியசங்கத் துறைவளாதலா னிற்கதிகை யம்புலீ யாடவா
வே, யரியைநகர் குடிகொண்ட வலர்மீது மங்கையுட
னம்புலீ யாடவாவே. (௬)

அகில வுலகங்களுக் கபயங் கொடுத்தருளு மங்கைகொடு
நின்னையன்னை, யம்புலீ வாவென வழைத்திடவு மவ
மதித் தகல்வான மோடுகின்றாய்,

தகவுணரி லண்டபகி ரண்டங்கண் முழுதுண்ட தனிமுதற்
கடிமையானோ, தடைபடற் குளமல மெனக்கொண்ட
தன்மைகொ றனிப்போக வடிவுகொண்டு,

நகுமின்னு மொளியுமென வொன்றாய பேதமாய் நற்புருட
காரியாகி, நாளழிவிலா வவனெ டேகசேடியு மானநல
மன்றிவே றில்லைகா,

ணகரவாசக னிவண்முகங்கோணி னருள்கலா னம்புலீ
யாடவாவே, யரியைநகர் குடிகொண்ட வலர்மீது மங்கை
யுட னம்புலீ யாடவாவே. (எ)

என்றுந் தனைப்பெற்ற தாய்வயிறு பொங்கிடச் செய்தினிய
மதுவொழுக்கு, மின்பந் தருந்தனது விடெலா மடைபட
வியற்றியிடர் பலபுரிந்து,

துன்றுலகபாலனம் விரும்பியவ தாரஞ்செய் துணையிலர் தம
க்கொர் துணையாய்த், தோன்றித் தணந்துறையும் ஞான
றிற் கனற்குநிகர் சுடர்தந்து கனலுவித்து,

மன்றவபராதியாய் நின்றயாமெவனெய்து மாறென மதித்த
னை கொலாம், வாவெனவும் வாராது நிற்றியெவ்வுலகுக்கு
மாதாவிவட்கமதிதா,

னன்றுசேய் பிழைசெய்யி னன்னைநெஞ் சழல்வளோ வம்
புலீ யாடவாவே, யரியை நகர் குடிகொண்ட வலர்மீது
மங்கையுட னம்புலீ யாடவாவே. (அ)

சேதனுசேதனர்க ளெப்பெரிய தீமைவகை செய்யினும்
முனிவு சிந்தை, சிறிதுஞ்செயா ளெங்ங னெனிலிலங் கே
சனிடு சிறையிடை யிருந்தகாலைத்,

தூதுகொடு கடறுவி வந்துதன துயிரினொடு சுடராழி தந்து
நின்ற, தூயவனுமனுநின் முன்னித் தீயரைத் தலைதுமித்
திடுவனென்று கனலப்,

பாதகவரக்கியர் நடுங்கிச்சரண்புகப் பரிவினொடு மய்யதீங்கு ப், பலபுரிந் தபராத மென்னி ழைத்தனர்களப் பதகனிடு தொழிலலாலென்,

ரூத ரமளித்தருளு மம்மையிவ ளாதலா லம்புலீ யாடவாவே, யரியைநகர் குடிகொண்ட வலர்மீது மங்கையுட னம்புலீ யாடவாவே. (கூ)

எவ்வெவர்க ளெத்தீங்கு செய்யினுஞ் சிறிதுமுனி வெண்ணி லாக் கருணைவடிவா, ளெனவெண்ணினுய் கொலிவளொடு பராமுகமா யிருத்தலைச் செகதீசனுஞ்,

செவ்விமுகில் போலும்பிரான் றிருவுளத் துணர்தல் செய்யு மேற் சினமதென்னுந், தீயவியும் வகைசெய்ய வல்லார்க ளெந்தச் செகத்தினு மிலாரொரவுணன்,

வெய்யதொழில் வாயசத் துருவனுய் வந்திடர் விளைக்கவர னுதியர்களைகை, விடவந்து சரணமே சரணமென வடிமீது வீழவொரு புல்லின்வெற்றி,

பவ்வொருவ னன்றுகொண் டதுமறிதி யானீயு மம்புலீ யா டவாவே, யரியைநகர் குடிகொண்ட வலர்மீது மங்கையுட னம்புலீ யாடவாவே. (கப)

ஏழாவது அம்புலிப்பருவ முற்றும்.

எட்டாவது

அம்மானைப்பருவம்.

எங்குமுவ மிக்குமுன தங்கவெழி லானகட லிடையெழுந் திலகுகொப்பூ, ழிவையெனவு மெவ்வெ வுலகத்தருமுனை ச் சரண மெய்திலர்க ளாயினவர்தஞ்,

சங்கையில வுற்பத்தி நாசங்க ளிவ்வாறு தானெனவு முட
னுதித்த, தவளக் கடாக்களிறு தனியுணப் பேரன்பு தழை
யத் திரட்டிநல்கும்,

பொங்குதிர ளைக்குழா மென்னவுந் தூயநீர்ப் பொன்னி முத
லான நதியைப், பூசலிட வம்மெனலி னோசையிடு தேனதி
பொருங்கரை தகர்த்தொழுகுசீ,

ரங்கணரி யக்குடியி னிற்குடிகொ ளலர்மங்கை யம்மானை
யாடியருளே, யாதவற் சோதியென மாதவற் சேருமவ
ளம்மானை யாடியருளே. (க)

வெண்ணிலா வொழுகுசுடர் முத்தம் பதித்தனவு மேதகுஞ்
செய்யமணியால், விராயவும் படர்நீல மணியா லியன்ற
னவு மீதெழவெறிந் தாடுகால்,

வண்ணமுடை யோகாசனத் துருவ மாமூல வண்பகுதி நின்
றுநின்முன், மகிழ்வுட னெழுந்துதொந் தங்களிடு மும்
மைபெறுவண்குணத் தியல்புகாட்டக்,

கண்ணகன் றிலகுதட மெனுமங்கை யுந்திரைக ளாங்கர மெ
டுத் தொழிவிலாக், கனவொளி மிகுந்தவின நவமணி யெ
னுந்திரள் கழங்காட மல்குசீர்சா,

லண்ணலரி யக்குடியி னண்ணுமலர் மேன்மங்கை யம்மானை
யாடியருளே, யாதவற் சோதியென மாதவற் சேருமவ
ளம்மானை யாடியருளே. (உ)

புலன்கலங்கிப் பொறிகலங்கிப் பொரும்பஞ்ச பூதங்களுங்
கலங்கிப், பொய்யிலா வுயிர்முற்று முடலழி தரச்செய்ய
பொற்பணிக டம்முடிவினி,

னலம்படர முன்னுருவ மேயெய்து தகையவென நணுகும
ணுவின் வடிவவாய், நானிலத் துறுகம்மி கைம்மெழுகி னு
றுசுவண நற்பிதிர் நலம்பெறத்தொல்,

லுலம்படுந் தன்மாயையிற்படிய வருவதா மோர்பகலிவ் வண்
டகோடி, யுறுநமக் கிவ்வா றெனச்சீவ ராசியிடை யுனை
யெணு மவர்க்காட்டல்போ,

லலங்குபொன் மணிமாட மல்குமரி யைக்கரசி யம்மானை
யாடியருளே, யாதவற் சோதியென மாதவற் சேருமவ
ளம்மானை யாடியருளே. (ங)

சந்ததமு மானந்த வெள்ளப் புதுப்புணரி தனின்முழுகி யுண்
ண வுண்ணச், சற்றுந் தெவிட்டாது நீநித முவப்புறுந்
தகையவடிமைக் கினியரா,

நந்துதலில் நித்தியர் தமக்கலா லெந்தெந்த ஞானியர்களுந்
தம்முளுந், நலமொன்று முணராது நல்லெழினி யிட்
டென நடுக்கிடந் துறமறைக்கும்,

பந்தமுடை யம்மாயை யிடைநின்று மாதிப் படைப்பிலிவ்
வண்டகோடி, பதுமைநின் சங்கற்ப மாத்திரத் தலைகடற்
படுபுற்புதத்தி னெழல்போ,

லந்தரத் தோடுபுவி புகழரியை யலர்மங்கை யம்மானை யாடி
யருளே, யம்மானை யீதியென வம்மானை யாடினவ ளம்
மானை யாடியருளே. (ச)

மணிநீல வம்மானை முன்செலப் பின்செல்லும் வழுவின்முத்
தம்மானைதாம், வல்லிருளி னைச்சீறி வெண்டிங்கண் மிசை
யோடு வண்ணமிதெனச் செமணியாற்,

மிணிநீர வுடனெழுவ வவ்விருண் மதிப்பாற் சினந்தெழு கதிர்க்குநிகரச், சென்றுநின் முன்மீள்வ சம்பகைமை யம் மூவர் செப்பிடற் கெய்தல்காட்டத்,

தணிவிலா வளமல்கு தண்புனற் றடதீர தலநின்ற வுயருமர னின், றம்பால் விழுந்தன கனித்திரளை வீசித் தனிக்கர னின் வீசியென்று,

மணிநிலா வாவிகளு மாடரியை யலர்மங்கை யம்மானை யாடி யருளே, யம்மானை யீதியென வம்மானை யாடினவ ளம் மானை யாடியருளே. (ரு)

வேறு.

கைப்பட நீரச நாறுத லிற்பொலி கமழ்குழல் வண்டினமுங், காதளவோடு கண்வண்டு மெழுந்து கலந்து மகிழ்ந்தாட,

வொப்பறு கைம்மலர் மேவிய சங்கமு முன்னடி காணவரு, மும்பர் மடந்தையர் சங்கமு நின்றன வொன்றி யொலி த்தாடச்,

செப்பெனலாந் தன மேனகையுந் திகழ் திருமுக மேனகை யுஞ், சென்றொளி யாடநுண் மின்னிடை யும்படி சிறுகி டை தானுட,

வப்பிடையுங் கணி சீரரியைத்திரு வாடுக வம்மனையே, யம் மனை மன்னுயிர் மாலவர் தம்மனை யாடுக வம்மனையே.(சு)

செம்மணி யிட்டொளி கொண்டன பின்பு செலச்செல முன் புசெலச், சென்று கரத்திடை வந்து புகுஞ்செழு நீலநிற த்தன தாம்,

பொம்ம லிளங்கதி ராதவனுலடர் போதுநடுங்கியவன், பொற்புறு நன்மனை வாய்மறை வந்துபுகுங் கருளின் றிரள் போ,

லெம்மை யினிப்பிறவிக் கடலிட்டிட ரெய்தி வருந்துகிலா, தின்னருள் கொண்டரு முத்தி யெனுங்கரை யெய்த விடுத்தருளு,

மம்மை யரிப்பிரியா யரியைத்திரு வாடுக வம்மனையே, யம்மனை மன்னுயிர் மாலவர் தம்மனை யாடுக வம்மனையே. ()

வந்து வணங்கின ரந்தரியுங் கலைவாணியுமே முதல்வான், மங்கையர்தாமொ ரிமைக்குமு ஞயிரம் வானிடை யாயிரமாய்ச்,

சந்த முறும்ப னிறத்தன கண்டு தயங்கி மயங்கினராய்ச், சாலமெனும் பெரு விஞ்சையியற்றின டாரணியின் கணெனு,

விந்தைகொ லீதொரு சின்னெடி யிற்பல மேம்படு மண்டமெலாம், விரிய விடுத்திடு மன்னையிவட்கு மிகுந்தொழிலோவிலென,

வந்தர மேலெழு மிசையரியைத்திரு வாடுக வம்மனையே, யம்மனை மன்னுயிர் மாலவர் தம்மனை யாடுக வம்மனையே. ()

தாமரை நின்றெரு தாமரை மேல்விழு தாழ்சிறை யோதிமமே, தாமெனலாய்மணி முத்தி னிழைத்தொளி தந்தன மீதெழுகாற்,

றேமுதிர்பாலண வின்னடிசிற்றிர டிரளையெனக் கருதாச், சென்று விழுங்களி வண்டென நின்னிரு செங்கணெளிப் படலாற்,

காமருபேடென நின்குழல் வண்டு கலந்தன நாணமுறுக்,
கருமணி யூடுபெதித்தன வென்று கருத்து மதித்தோட,
வாமதுவின் பொழி லரியைநகர்த்திரு வாடுக வம்மனையே,
யம்மனை மன்னுயிர் மாலவர் தம்மனை யாடுக வம்மனையே.

செம்மணி யம்மனை பின்பு செலச்சுடர் செழுமுத் தம்மனை
தாஞ், சென்றுமு னோடுவ பிறர்மனை வவ்விய செய்கைய
வம்மதியந்,

தம்மனை வந்தெழு தகைமை குறித்தெழு தக்கசினங் கது
வாத், தடியக்கடிது தொடர்ந்துசெ லாதபர் தமை யொத்
திட வொழுகு,

மும்மை மதம் பொழியுங்கர குஞ்சர முன்ன ரளித்தருளு,
மூல முதற்பொரு ளானவனுக் கொர்முதற் றிருநாயகியா,

யம்மையு மிம்மையு மருளரியைத்திரு வாடுக வம்மனையே,
யம்மனை மன்னுயிர் மாலவர் தம்மனை யாடுக வம்மனையே.

எட்டாவது அம்மானைப்பருவ முற்றும்.

ஒன்பதாவது

நீராடற்பருவம்.

தேனுண்டெ ழுந்திசைப யின்றனுதினந் துயில்செய் செறி
வண்டர் குழலொடலையச், செய்யசிந் துரதிலக மழியவா
ணுதன்மருவி றிகழ்பிறையின் வடிவுகாட்ட,

மீனுண்ட கண்சிவப் பேறவில விதழ்வெண்மை மேயவிரு
தாமரைத்தாண், மீதிட்டு வளர்நூபுரங் கலிப்பக் கனக
மின் பிதிர்படர்ந்த தனமேற்,

கானுண்டநாவி யின்களியழி தரச்சிறுகு கைப் பிடியினுண் ணிடையின் வாய்க், கலைநெகிழ வெம்மடிக ளுருவென்ற தண்புனற் கணவனொடு புணர்தல்காட்டி,

வானுண் டெழுந்தலை புரண்டுவரு கோனேரி வந்துபுன லாடியருளே, வனசத் தொழிந்தரியை நகரத் துவந்ததிரு மங்கைபுன லாடியருளே. (க)

செந்திலக மிட்டிலகு செம்பிறையு மஞ்சனந் தீட்டியொளிர் வெய்யவிடமுந், தேமாங் குயிற்கினிமை கற்பித்தருந் துவர் செயப்படு வளத்தி னிட்ட,

முந்தமுது மம்பொன்வா ரிட்டணி கருப்பூர முதுசே றளாய்க் கனத்த, முலையயிந் திரவெள்ளை யானையுங் காஞ்சி யெனு மூதணிதரித்து னுண்மைத்,

தந்தினு நுடங்கிய விடைக்கற்ப வல்லியொடு தான்றுலங்கிக் கலசமாந், தண்வாரி யிடைவந் தெழுந்தொளிர நின்ற தொரு தகையிதென வோதமெல்ல,

வந்தன மெனச்சாயல் மயிலெனக் கோனேரி வந்துபுன லாடியருளே, வனசத் தொழிந்தரியை நகரத் துவந்ததிரு மங்கைபுன லாடியருளே. (உ)

வெண்ணிலா வீசித் தணந்தார்க்கு வெப்பமொடு மேவிச் சிறந்த மடவார், மிக்கமகிழ் வெய்திடப் பேரின்ப முந்தந் து மிசைவரு கலைத் திங்களு,

மண்ணிலா விருளுந்தம் வெம்பகைமை நடுவர்பால் வந்து பகர்கின்ற வென்ன, மலைவல்லி யொடுகலையின் மடவல்லி யும்பாங்கர் மருவினர் வணங்கி நிலமேற்,

புண்ணிய முடன்கடிய தீவினையு நிற்புகல் புகுந்தவரி னின்று மவர்பாற், பூணினியர் பாற்பகைவர் பாலெய்த வருளு ளொடு புனன்மூழ்கி நீலதவள,

வண்ணவிரு வல்லியின் மருங்கெழுவோர் பொற்கொடியின் வந்துபுன லாடியருளே, வனசத் தொழிந்தரியை நகர துவந்ததிரு மங்கைபுன லாடியருளே. (௩)

நலம்பொலி சிலம்பொலியி னம்போருகத் தளிம நண்ணு மின மெனமதித்து, நளினத்து வந்தமட நடையோதி மங் கலையி னங்கையென வடிகள் பற்றிச்,

சலந்தலை மிகத்திருநி னடைகண்டு நாணினொடு தலைகவிழ வும் வரால்க, டடந்துணி யெனலாய நின்கணைக் காலி னிணை தழுவிச் சமழ்ப் பெய்தவு,

மலம்புபுன னேமியம் புள்ளுனது தேகவெழி லானநதி யி டையெழுந்த, வணியிலகு கொப்பூழ்க ளிவையெனச் சுட ர்கொங்கை யணவியிணை பெறுகலாது,

வலங்கெட வெரூஉக்கொண்டு மாழ்கவுங் கோனேரி வந்து புன லாடியருளே, வனசத் தொழிந்தரியை நகரத் துவந்த திரு மங்கைபுன லாடியருளே. (௪)

கலைமா தொருத்தியிரு கைக்கொண்ட வெண்ணிலாக் கன மணி யிழைத்ததவளக், கவினொன்று சிவிறிச் செழுங் கற் புரப் புனல்கருங் குழற் கற்றை யுறுபோ,

துலையாத காரிருட் கற்றையிற் சுடர்மதியி னொண்ணிலாக் கதுவல் காட்டி, யொழுகுதொறும் வான்மாரி பெய்யுமா றிஃதெனவு முயர்வரை மடந்தையென்னுங்,

குலமாது பொற்சிவிறி யிற்கொண்ட குங்குமக் குளிர்புன
லொழுக்க வென்றாழ், கொண்டவெயி லவ்விருட் சீறுத
கை காட்டியிழி கொள்கைசினவிச் சிதைக்க,

வலியா லுகுங்குருதி மானவுங் கோனேரி வந்துபுன லாடிய
ருளே, வனசத் தொழிந்தரியை நகரத் துவந்ததிரு மங்
கைபுன லாடியருளே. (௫)

வேறு.

கேசத்தொடு சைவலமுங்விழிக் கேளோடொழுகுங் கயலின
முங், கேழார்வதனத் தொடுமரையுங் கிளக்குங்கனிவா
யொடுமாம்பல்,

வாசத்தாருங் குழையிணையும் வளையும்வளையு மெழிற்களனு
ம், வனக்கொங்கையினோ டொண்முகிழும் வயினின்வரை
யும் பயிறிரையு,

நேசத்துந் தியுஞ்சுழியும் ஞெண்டுமுழந்தும் வரால்கணையு,
நீர்வித்துருமத் தொடுவிரலு நேடிக்காணு நிலையரிதாத்,

தேசத் தவர்கொண் டாடரியைத் திருமான் செழுநீ ராடுக
வே, தேவர் பெருமா னொருதேவி தேனற் றிடைநீ ராடுக
வே. (௬)

என்றுந் தமையா தரவினெதிர்ந் தெடுத்தார் வளர்த்தா ரிடரு
றத்தா, மேகிப் பாழி வயிறுபெரி தென்ன வயற்பா லெய்
துவர்போன்,

மன்றன் மலர்வாய்ச் சிலவளிகள் வாவச் சிலதா மாயினுடன்,
மாயுந் தகையோ ரெனப் பெருகு மருவார் கூந்த லுடன்
மூழ்கத்,

துன்றும் புனன்மற் றன்றியதிற் றோயுங் கயலும் புள்ளின முஞ், சுரர்நா டீந்த கற்பமுடன் றுதையுந் தகர மண மணப்பத்,

தென்றென் றிசைக்கோ ரணியரியைத் திருமான் செழுநீ ராடுகவே, தேவர்பெருமா னொருதேவி தேனுற் றிடைநீ ராடுகவே. (எ)

தகரக் களியாற் சுடருதவுந் தனையை யெனவு மரிசனத் தாற், சமையுஞ் சேற்றால் வாணிநதி தானே யெனவும் வெண் சந்தின்,

பகர்கற்புரத்தின் றண்குழம்பாற் பாகீரதியா நதியெனவும், பரவிப்பொருதுந் தலைமயக்காற் பாயுந்திருவேணிக்கூட்ட,

நிகர்பெற்றிடவும் புவியோர்கூ னீடுஞ்செவிடுமலடுமை, நேய த்தருளா லினிதொழிக்கு நெடுமாலரியக் குடியிடத்துஞ்,

சிகரத்திருவேங் கடத்துமுறை திருமான்செழுநீ ராடுகவே, தேவர்பெருமா னொருதேவி தேனுற்றிடைநீ ராடுகவே.()

வாசமதுவி னதியென்னும் வண்ணமகளார் குழையணிந்து மணியுங்கனக நித்திலமும் வாரிப்புனைந்து சந்தொடகில்,

பூசிமலரின் பொற்சுண்ணம் புனையாத் திமிர்ந்து பூண்முலை மேற், புதிய நறுமென் குழனீவிப் பொலிய மலர் மேற் புனைந்தன்போ,

டாசைமுதிரத் திரைக்கரங்கொண் டாட்டக் கனிவாய்ப்பூமி யெனு, மரிவை கரனுந் தமிழ்க் கோதை யணங்கின் கரனு மிருகைபற்றித்,

தேசுதிகழு மரியையகர்த் திருமான்செழுநீ ராடுகவே, தேவர் பெருமா னொருதேவி தேனுற்றிடைநீ ராடுகவே. (கூ)

பாதங் கமலஞ் செய்யவிரல் பவளம் புறங்கா லெழிற்கமடம், பசுமென்கணைக்கால் வரான் முழந்தாள் பருஞெண்டுந்தி சுழிமடிப்பு,

மோதுந்திரைமென் கொங்கைமரை முகிழங்கழுத்து வளை வதன, முளரிகனிவா யாம்பல்வெண்பன் முத்தங்காது வள்ளைவிழி,

போதம்பானல் கருமுகிலிற் பொலியுங்கூந்தல் சைவலமாய்ப், புனலிற்றோன்றப் பொதியவிழப் பொறிவண்டேப் பொடிபறக்குஞ்,

சீதங்கமழும் பொழிலரியைத் திருமான்செழுநீ ராடுகவே, தேவர்பெருமா னொருதேவி தேனுற்றிடைநீ ராடுகவே.()

நீராடற்பருவ முற்றும்.

பத்தாவது

ஊசற்பருவம்.

பாதமலர் பிரியாத பழவடியரைத் தனது படியருளு பரம னெனவே, பச்சொளியி னவணுள்ள பொருளினைத் தன் னொளி படுத்து மரகத வூசன்மே,

னீதக விருக்கின்ற தகையவனன் மார்பிலுறை செய்கையை விரிப்ப வதுகா, ணீள்சுட ரவன்றானு மவ்வாறு பாவனை செய் நினைவுடைய னாயினனெனப்,

போதினுகு தேனருவி கொண்டுமிசை விண்ணினுயர் பொய்
யில்சுர கங்கைநதியைப், புகரில்கலை நங்கைநதி யாய்விட
வியற்றியெழு பொழிலிடை யில் வந்துலவவே,

பூதல வளங்கொளரி யக்குடி தழைத்தகொடி பொன்னூச
லாடியருளே, பொற்கமல மாளிகையி னற்புத வணங்க
ரசி பொன்னூச லாடியருளே. (க)

வானக மடந்தையர் குழாமிரு பதத்தளிர் வணங்கினர் மரு
ங்கி லுற நின், வாளொளிய செம்பிறையின் மதியினில
விதுகொலென வானில வொழுக்குமணிமுத்,

தானமணி யூசன்மிசை நீயினிது வந்துறைத லமரருட னசு
ரர்கள்குழா, மலைகடல் கடைந்தபொழு ததன்மிசை யெ
ழுந்ததொரு வதிசயம் விளைப்ப வளவி,

லூனமி லுடுத்திர ளெனப்பல மணித்திர ளொளிச்செறி வெ
றிப்ப வுயர்வா, னூடுபடர் மாளிகை மிசைக்கனக வண்
கொடியு மொண்முகி ழுடத் துயல்வரும்,

பூநிகரி லாதவரி யக்குடி தழைத்தகொடி பொன்னூச லாடி
யருளே, பொற்கமல மாளிகையி னற்புத வணங்கரசி
பொன்னூச லாடியருளே. (உ)

மாற்றள விடப்படா தொளிர்பசிய வண்கனக மயமான மணி
யூசன்மேல், வந்தினி திருக்கின்ற தன்றுபொற் கமலத்
தில் வந்ததொரு வண்மையுமலாற்,

சாற்றிய மறைப்பொருள தாமவனெ டுன்னையுயர் தனிவடி
வெனப் பகர்தலாற், றமனிய வனத்தினுட னெளியவ னி
டத்திலுறை தன்மையு நிகர்ப்ப மிசைபோய்க்,

காற்றின மலைக்கவுதிர் சருகொடிலை மதுவின்மலர் காய்கனி யனைத்தும் விண்பாற், கங்கையின் விழுந்தெறி கருங்க டன் மடுப்பவுயர் காவுலகளந்த நெடுமால்,

போற்றிகழு கிற்குமரி யக்குடி தழைத்தகொடி பொன்னூச லாடி யருளே, பொற்கமல மாளிகையி னற்புத வணங்கரசி பொன்னூச லாடியருளே. (ங)

பலகோடி யண்டச் சராசரத் தொகுதியொரு படியாகி நுதி யினிலையிற், படவேத்தி ரங்கைகொடு னிடைமுறையி னி ற்பெற்ற பழையதிரு மந்திரத்தை,

யுலகோடி யுழலாது வகுள மாலிகைபுனையு மொருவொளி யினால் வெளிசெயு, மொப்போது தற்கரிய சேனைக்கு நா யகனு முனதுசேனவையை விரும்பி,

மலியானெ ருக்கியிடு மயனுதி வானவர்கண் மகுடமிசை தா க்கவுதிரு, மணியும் பொனுங்கோயி லலகிடுந் தொண்டர் நீ மகிழ்வினடைப் புரிந்த,

பொலனுர்செய் மலையிற் றிரட்டவரி யைக்கரசி பொன்னூச லாடியருளே, பொற்கமல மாளிகையி னற்புத வணங்க ரசி பொன்னூச லாடியருளே. (ச)

வெள்ளித் தகட்டின மெனத்திகழும் வெண்டோட்டின் வி ரைகமழ் கமலமடமான், வெள்ளடை வியந்தளித் தொரு மருங் குறவிமய மெல்லியலு மற்றெருமருங்,

கொள்ளிற் சுடர்ப்படிக் கங்கையிற் கொடுநிற்ப வொளிர் பொனுல கத்துமடவா, ரோகையொடு மஞ்சலிசெய் திருமருங் கினுமேவ வொண்ணுதற் பெண்வடிவுகாண்,

கொள்ளிற் சினப்பேயு முள்ளிரங் கிடுமென்னல் கொண்டு
மதியமு மிருளுமின், குழுவுமங் கையர்வடி வெடுத்தொ
ளி யவற்சேர்ந்து குறையிரந் திடுவவேய்ப்பப்,
புள்ளுக்கு நிலயமாம் பொழிலரியை யலர்மங்கை பொன்
னூச லாடியருளே, பொற்கமல மாளிகையி னற்புத வண
ங்கரசி பொன்னூச லாடியருளே. (ரு)
ஓதற் கருங்கொண்டல் வான்மறை தரப்பெற்று மோர்தரு
மனத்துவசமா, யுடலெங்கு மிசையப் படைத்திட் டரும்
பெறல வும்பர்பர வத்திகழ்ந்து,
கோதற்ற கோகனக மிசைவந்து திசைமுகங் கொண்டுதண்
மதிபயின்று, கோலக் கலைக்கொடியை யாரப் புணர்ந்து
மொளி கூரத் தழைத் திடுதலாற்,
சீதப் பெருஞ்சுடரின் மாடக்குழாமெலாந் திகழ்நான் முக
த்தனென்னச், சென்றொளிர நிற்கின்ற வரியக் குடிக்க
ணுயர் செல்வக்கொழுங் கொம்புபோற்,
போதுற் றிலங்கிவள ரலர்மீது மங்கைமகிழ் பொன்னூச
லாடியருளே, பொற்கமல மாளிகையி னற்புத வணங்கரசி
பொன்னூச லாடியருளே. (௧௩)
தேவர்க ளெனைப்பலரு மாலைய மெனக்குடிகொள் சிகரவட
வரையின்மீது, சிறைவிரித் தன்னக் குழாம் பரந் திடுவ
போற் செய்யதிர வியமாளிகை,
மீவளரும் வெண்கொடி விசும்பினதி யாமென விளங்க வத
னிடை யிடையுலா, மெல்லிய பசுங்கனக வண்கொடி யின
ங்கள்சுர மெல்லியர் வியப்பினொடுமத்,

தாவள நதிப்புனல் படிந்திடுவ ராமென றயங்கிடு வளங்கொ
ளரியைத், தானத்தி லுறைகின்ற வலர்மீது மங்கைநின
தனியடிய ருள்ளமென் னும்,

பூவினிதம் வந்துறையு மொருமுதன் முதற்றேவி பொன்
னூச லாடியருளே, பொற்கமல மாளிகையி னற்புத வண
ங்கரசி பொன்னூச லாடியருளே. (எ)

கற்பங்கள் பலகோடி செல்லினுந் தொலையாத கடுவினைய
பிறவியென்னுங், கடலைக் கடந்தரிய பரமவீ டென்னு
மொரு கரைபெறற் கெழுதோணியா,

நற்பரஞ் சோதிவடி வாயசட கோபன்முதல் ஞானவாழ்வார்
கள் சொற்ற, நாலாயிரங் கொண்டு துதியா வணங்கிடவு
நாதமுனி யந்தமறையைச்,

சிற்பந் தவிர்ந்தத ளத்திறமை பிறழாது தேவவிசை யிற்
பாடவுஞ், செய்யசீ ராளவந் தாரு மொருகவிநா லு செப்பி
நின் றடிகடொழவும்,

பொற்பினுக் கிடமான வரியக் குடிக்கரசி பொன்னூச லா
டியருளே, பொற்கமல மாளிகையி னற்புத வணங்கரசி
பொன்னூச லாடியருளே. (அ)

என்னிலமு நன்னிலைமை பெற்றுயர் விசும்பினிடை யெய்தி
மகி ழக்கருணைசெய், யெழுபத்து நால்வரெனு மடியரொடு
மெதிராச னிணையடி யிறைஞ்சியேத்த,

நின்னையொரு சேதனரி லிட்டுரைசெய் தவர்வாய் நெருங்க
நிகமத் துனிலையை, நிலையிட்டு நின்னடையு பாயமல தில்லை
யொளி யுலகடைத லெனலையீச,

னுன்னிமறை யுச்சியி னுறும்பொரு ளுரைத்தமையி னேங்கு நிகமாந்தகுருவென், றோதுபெய ருற்றவரு நற்றின மிதென்றுகொ டுளங்களி சிறந்துதொழநற்,

பொன்னகரு மொப்பி லரியக்குடி தழைத்தகொடி பொன்னூச லாடியருளே, பொற்கமல மாளிகையி னற்புத வணங்கரசி பொன்னூச லாடியருளே. (கூ)

உருமாறி யிடமாறி யொளிமாறி மிகுமன்பி னேங்குதாய் தந்தைமாறி, யுறுதொழில்கண் மாறிவுப் வொரு பொழுது காணுமு ழுழல்சேதனக் குழாங்கள்,

கருமாறி வெவ்வினைத் தொடர்மாறி மிக்கபர கதியெய்து மாறுசரண, கமலத்தி னூபுர வனங்களாட ச்சுடர்கலாப நுண் ணிடையினுட,

மருமாறி னகையாட நகையாட வருளாட வண்டினங் குழலினுட, மடமாத ரிசைபாட வரமாதர் நடமாட வானவர் கடுதியாடவே,

பொறுமாறு வானெடெதி ரரியைக்க ணலர்மங்கை பொன்னூச லாடியருளே, பொற்கமல மாளிகை யினற்புத வணங்கரசி பொன்னூச லாடியருளே. (கo)

ஊசற்பருவம் முற்றும்.

வாழி.

வாழிதிரு மால்வாழி மலர்மங்கை சேனைக்கு மன்முதலவெவரும் வாழி, மகிழ்மாற னுதியா மாழ்வார்கள் வாழியவர் வண்டமிழின் மறைகள் வாழி,-யூழ்வினையி லெழுபத்து

வாழி.

நால்வரொடு மெதிராச னெப்பிலாவடிகள் வாழி, யோங்கு வை ணவம்வாழ வந்தநிக மாந்தகுரு வோதுகலை முற்றும் வாழி,-தாழ்வினு றெட்டெனுந் தலம்வாழி வாழியத் தல மகிமை வாழி யடியார், தலைமை பெறு மறைவாழி வைணவ க்குறியைந்து தகவாழி புல்லை யெவ்வுள்,-வீழ்குருகை தென் னுகை யரியையெனு நகர்மேவு விண்டு வொடு திருமகட்கா ய், மேவுபிர பந்தங்க ளோரேழு மென்றென்று மேதினியின் மிகவும் வாழி.

வாழி முற்றும்.

லோ

LIBRARY
MAR 15 2023
UNIVERSITY OF TORONTO

ஸப்தப்பிரபந்தத்தின்

பிழைதிருத்தம்.

திருவெவ்வுளூர்த் திரிபந்தாதி.

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
௩	௫	௪	ப்ாார	ப்பார
௩	௭	௩	யவத்	வவத்
௧௫	௭௬	௨	யானிற்	யாணிற்
௧௬	௮௪	௩	ணுக்கண்	ணுக்கன்
௧௭	௮௧	௧	கூரும்	தூரும்

திருக்குருகூர் யமகவந்தாதி.

௩௬	௭௫	௨	வானற	வான்ற

திருநாகைத் திரிபந்தாதி.

௩	௧௩	௩	நின	நின்
௬	௩௧	௩	சோதன	சோதர
௮	௪௧	௨	பணையா	பனையா
௩	௪௭	௧	கருதிலன்	கருதிலள்
௩	௫௧	௪	தானை	தாளை
௧௫	௮௮	௧	றிகரை	றிகறர

திருவரியக்குடித் திரிபந்தாதி.

௩	௮	௩	வேட்	வேள்
௫	௨௬	௨	நின்றவமா	நின்றமா
௮	௪௬	௨	பண்டா	மண்டா

அரியக்குடித் திரிபந்தாதி.

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
௧௦	௫௧	௧	மலர்மீ	மலமீ.
௧௫	௯௧	௩	பொல்லானென்	பொல்லேன்
,,	,,	௪	செய்தி	செய்
௧௭	௯௧	௩	டந்துய	டந்துதுய

திருவரியைச் சிலேடைமாலை.

௧௫	௮௧	௨	மனுக்கு	மறுக்கு
,,	,,	,,	நந்தி	நத்தி
௧௫	௮௨	௧	ஒகை	ஓகை
௧௮	௧௦௦	௩	குப்பய	குபய

பிள்ளைத்தமிழ்.

௩	௪	௫	மல	மத
௪	௬	௨	பான்மூ	பானிரு
௮	௪	௮	ல், யொரு	லொரு
௮	௫	௧	தே	வேத்
௧௦	௯	௪	பரத	பாத
௧௨	௧	௭	அகிஞா	அகிலா
௨௧	௮	௩	னனித்	னளித்
௨௪	௩	௩	னெனும்	லெனும்
௨௬	௯	௨	ஞனனமொ	ஞன்மொ
௩௭	௧௦	௨	மருங்கல்	மருங்குல்
௪௭	௧	௪	மேய	மேவ